775

A. M. D. G.

அர்ச்சியசிஷ்ட

# மெரிசி ஆஞ்செலம்மாள்

(ஊர்சுலின் கன்னியர் சபை ஸ்தாபகி)



... by Rev. Br. F. M. Ponnusamy, S.J.,
...seph's Industrial School Press,
...HINOPOLY.

1932

ஒ6:4198யி
N32
125914



# அர்ச். மெரிசி ஆஞ்செலம்மாள்

(ஊர்சுலின் கன்னியர் சபை ஸ்தாபகி)

## முதல் அதிகாரம்

### பிறப்பும் இளமைப்பருவமும்

ஆஞ்செலம்மாள் இத்தாலியா தேசத்திலுள்ள கார்டா என்னும் அழகிய ஏரிக்கரையில் டெஸான்ஸானே என்னும் சிறிய கிராமத்தில் 1474-ம் ௵ மார்ச்சு-௴ 21-ம் ௳ ஜனனமானாள். இவள் தந்தையின் பெயர் ஜான் மெரிசி. இவளது பெற்றோர் தனவந்தர் அல்லாவிடினும் உயர்ந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்; தெய்வ பக்தியும் வேதவைராக்கியமும் நிறைந்த உத்தம கிறீஸ்துவர்கள். சர்வேஸ்பரன் இப்பக்தியுள்ள குடும்பத்தை ஆசீர்வதித்து இதற்கு அநேக குழந்தைகளை அளித்தனர். அவர்களில் இருவர் பெண்பாலர். எல்லோருக்கும் பிந்தியவள் நாம் இப்போது எழுதுகிற ஜீவிய வர்த்தமானத்தின் கதாநாயகியாகிய ஆஞ்செலம்மாள் மெரிசி. இக்குழந்தைக்குத் தேவ பராமரிப்பால் கொடுக்கப்பட்ட இந்நாமமானது பிற்காலத்தில் நமது அர்ச்சியசிஷ்டவள் நடத்த இருக்கும் சம்மனசுக்களின் ஜீவியத்தின் முன்குறிப்பாயிருந்தது.

எப்பொழுதும் ஒற்றுமையும் சந்தோஷமுமே குடிகொண்டிருந்த இவர்களின் சிறிய இல்லமானது இப்பாலர்களுக்குப் பக்தியை ஊட்டும் ஓர் பாடசாலையாயிருந்தது. இப்பிள்ளைகளை சிறுப முதற்கொண்டே அறநெறியில் பழக்கி, வேதவிசுவாசத்தில் ஸ்திரப்படுத்துவதே இவர்

களுடைய பெற்றோரின் அதிமுக்கிய அலுவல். இத்தகைய உத்தம பெற்றோரின் கண்காணிப்பில் வளர்க்கப்பட்ட நமது ஆஞ்செலாளின் புண்ணிய வாசனை அவள் புத்தி விபரம் அறியத்துவக்கிய நாள் முதல் எங்கும் பரிமளிக்கத் தொடங்கிற்று. தேவ வரப்பிரசாதத்தின் திவ்ய கதிரொளி அவளது அழகிய வதனத்தில் ஜொலித்தது. அம்மாசற்ற சிறுமியின் கண்கள் அவள் தூய இருதயத்தின் பரிசுத்தத்தைக் காட்டும் ஸ்படிகம்போல் ஒளிர்ந்தன. பெண்களின் ஆபரணமாகிய அடக்கவொடுக்கம் அவளது நடை உடை பாவனைகளில் காணப்பட்டது. அவளது அமிர்த மொழிகள் அப்பாலகியின் இருதயத்தின்கண் சுவாலித்தெரிந்த தேவசிநேக அக்கினியின் அகோரத்தைத் துலாம்பரமாய் விளக்கின. அவள் நடத்திய விளையாட்டுகளும் சம்பாஷணைகளும் எல்லாம் பத்திக்கிருத்தியங்களுக்கு அடுத்தவைகளே. தன் சகோதரியுடன் சேர்ந்து ஜெபக்கூடங்கள் கட்டுவதும் பீடங்கள் ஜோடிப்பதும், தேவ ஸ்துதிகள் பாடுவதுமே அவளுடைய விளையாட்டுகள்.

இவைகளையெல்லாம் கண்ணுற்ற பெற்றோர் சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தினர். முக்கியமாய் ஆஞ்செலாளின் பத்திக்கிருத்தியங்களைக் கருத்துடன் கவனித்துவந்த அவள் தாய்தந்தையர் தங்கள் குமாரத்தி முற்றிலும் சர்வேசுரனுக்காகவே தெரிந்துகொள்ளப்பட்ட பெண்மணி எனக் கண்டறிந்து அவளை வெகு கவலையுடன் பராமரித்து வந்தனர். இக்குடும்பத்தில் நாள்தோறும் சாயந்திர வேளையில் ஏதேனும் ஓர் நல்ல புஸ்தகத்தில் சில பாகங்களைப் பொதுவில் வாசிக்கும் வழக்கமிருந்தது. இவைகளையெல்லாம் ஆஞ்செலம்மாள் வெகு கவனமாய்க் கேட்டுத் தியானித்து வருவாள். நமது இரட்சகரின் பாதவடியைப் பின்பற்ற சகலத்தையும் துறந்துவிட்ட அர்ச்சியசிஷ்டவர்களின் சரிதையைக் கேட்பது அவளுக்கு வெகு ஆனந்தம். தானும் அவர்களைப்போல் ஏகாந்த ஜீவியம் ஜீவிக்க அவாவுற்று தன் கருத்தைத் தன் சகோ

தரிக்கு வெளியிட்டாள். இருவருமாக வீட்டில் ஓர் ஜெபக்கூடத்தை ஸ்தாபித்து ஜெப தபத்தில் நாட்கழித்து வந்தனர். ஆஞ்செலம்மாள் செய்துவந்த கடின தவத்தால் அவள் தேகம் மெலிந்து வாடுவதைக் கண்ணுற்ற அவள் தந்தை அவள் தன் தவக்கிருத்தியத்தைக் குறைக்கக் கட்டளையிட்டார். தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிய அவள் பிரயாசைப்பட்டும் முடியாமற் போயிற்று. இரவில் வெகு நேரம் ஜெபத்தில் நிலைத்திருப்பாள். இப்படி ஜெபத்தியானத்தில் அமிழ்ந்திருக்கும் ஓர் இரவில் தேவ ஏவுதலால் தூண்டப்பட்டு ஆஞ்செலம்மாள் தன் கன்னிமையைச் சர்வேஸ்பரனுக்கு ஒப்புக்கொடுத்தாள். எல்லா இருதயங்களையும் சேசுவின் பாரிசமாய் இழுக்க வேண்டுமென்ற அடங்கா ஆவலுற்ற ஆஞ்செலம்மாளுக்கு இச்சுப செய்தியை இரகசியமாய் வைத்திருக்க முடியவில்லை. அடுத்தநாள் இவ்விஷயத்தைத் தன் சகோதரிக்கு வெளியிட்டு அவளும் தன்னைப்போல் சேசுவின் சிறந்த பத்தினியாகும்படி செய்தாள்.

இவ்விதம் மன உச்சாயமாய்த் தங்களை முழுதும் சேசுவின் சிநேகத்திற்குப் பலியாக்கின இரு சகோதரிகளையும் ஒரு பெரிய துன்பத்தால் சோதிக்கக் கடவுள் சித்தமானார். அவர்களின் நேச தந்தை தனது நாற்பத்தாறும் பிராயத்தில் தீரா வியாதியால் பீடிக்கப்பட்டு, எவ்வித அவிழ்தத்திற்கும் குணப்படாமல் சில வருஷங்களில் பரலோக பிராப்தியானார். இம்மரணத்தால் மெரிசி குடும்பம் முழுவதுமே துயரிலாழ்ந்ததெனினும், ஆஞ்செலாளின் துயரம் அணைகடந்ததாயிருந்தது. தந்தையை அழைத்துக்கொண்ட சர்வேஸ்பரன் தன் தாயை நற்சுகத்துடன் காப்பாற்றுவாரென்ற நம்பிக்கையில் சற்றே ஆறுதலடைந்தாள். ஆகவே, எவ்விதத்திலும் தன் தாய்க்கு ஆறுதலும் சந்தோஷமும் கொடுக்க முயன்றாள். ஆனால் அவளது முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீர்போல் வியர்த்தமாயின. கணவனின் பிரிவாலும், மக்களின் கவலையாலும் மனோவியாகுலமடைந்த அவள் அருமைத் தாயின்

சுகம் வரவர குறைந்து சீக்கிரம் பாயும் படுக்கையுமானுள். கடைசியாய் தன் இரு மக்களையும் ஆண்டவர் பராமரிப்பில் ஒப்புவித்துப் பரமபதமடைந்தாள். தாய்தந்தையற்று அநாதைகளாய்த் தவித்து நிற்கும் நம் இரு பாலிகைகளின் தீராத்துயரத்தை எவ்வாறு எடுத்துரைப்பது! துயரின் பெருக்கைத் தாங்கமுடியாத அப்பெண்மணிகளின் இருதயங்களில் சிறிதுபோழ்து தேவ திருவுளத்திற்கு விரோதமான முறைப்பாடுகள் கிளம்பத் துவக்கின. ஆனுல் சர்வேஸ்பரன் தங்கள் இருதயத்தின் பாசப்பற்றுதல் யாவையும் தமது கைவசமாக்கவே தாங்கள் இவ்வுலகில் மிகுதியாய் நேசித்துவந்த அருமைப் பெற்ருேரைத் தங்களிடமிருந்து பறித்துக்கொண்டாரெனக் கண்டுணர்ந்து, தேவ திருச்சித்தத்துக்குத் தாழ்மையுடன் அமைந்தனர்.

இப்பிள்ளைகளின் பரிதாப நிலைமையைக் கண்ட இவர்களது பக்தியுள்ள தாய்மாமன் பையான்கோசி, இவர்கள் இருவரையும் சாலோ என்னும் தனது ஊருக்கு அழைத்துக்கொண்டுபோய்த் தகப்பனைப்போல் இவர்களைப் பராமரித்து வந்தார். அவ்விடத்தில் இவ்விரு சிறுமிகளும் தம் சொந்த இல்லத்தில் செலவழித்து வந்ததுபோல் தங்கள் நேரத்தை ஜெபத்திலும் வேலையிலும் கழித்து வந்தனர். ஆஞ்செலம்மாள் தன் வயதிற்கு மேலான தவக்கிருத்தியங்களைச் செய்து வருவதை அவள் மாமன் கவனித்தாலும் அதைத் தடுக்க அவருக்குத் துணிவு வரவில்லை. ஏகாந்த ஜீவியத்தின்மீது ஏக்கங்கொண்ட இவர்களுக்கு இப்பத்தியுள்ள வீடும் திருப்தியைக் கொடுக்கவில்லை. மனித சஞ்சாரமற்ற காட்டிற் சென்று, வனவாசம் செய்து சர்வேஸ்பரன் ஒருவர்பேரிலேயே சிந்தையாயிருக்க வேண்டுமென்ற எண்ணம் இச்சிறுமிகளின் இருதயங்களை ஆட்கொண்டது. ஆகவே இவர்களின் ஏக்கமும், நோக்கமும், சம்பாஷணைகளும் அவ்வன ஜீவியத்தையே சார்ந்திருந்தன. ஒரு நாள் ஊருக்கு வெளியேயிருந்த ஒரு சிறு கோவிலுக்குப் பூசை காணச் சென்ற இருவரும் பூசை முடிந்தவுடன் தேவகரத்தால் நடப்பிக்கப்பட்டு சமீபத்தி

ளுள்ள ஒரு காட்டை அடைந்தனர். உலகத்திற்கும் அதின் பெருமை சிலாக்கியத்திற்கும் தப்பியோடிய இவ் விரு சகோதரிகளும் சர்வேஸ்பரனேடு அன்னியோன்னிய மாய் ஜீவிப்பதற்கு இதுவே ஏற்றவிடமென மகிழ்ந்தனர்.

இஃது இவ்வாறிருக்க, வீட்டில் சிறுமிகளைக் காணுது மாமனுர் பட்ட மனேவியாகுலம் மெத்த. ஊரிலுள்ள கோவில்களிலெல்லாம் தேடி அலேந்தார். அவர்கள் போகக்கூடுமான வீடுகள்தோறும் விசாரித்தார்; ஓரிட மும் அவர்களைக் காணேம். கடைசியாய் அவர்கள் அடிக் கடி ஏகாந்த ஜீவியத்தின் இன்பத்தைப்பற்றி சம்பாஷிப் பது அவர் ஞாபகத்திற்கு வர சுற்றுப்பக்கத்திலுள்ள காடு களில் தேடி அலேந்து வெகு பிரயாசையுடன் அவர்கள் இருந்த மறைவிடத்தைக் கண்டுபிடித்து அவ்விரு தபசி களையும் வீடுகொண்டுவந்து சேர்த்தார். இச்சங்கதி ஊரெங்கும் பிரசித்தமாகவே பலரும் பலவிதமாய்ப் பேசி ஞர்கள். சிறு பிள்ளைகளின் விளையாட்டென நகைத் தனர் சிலர். குருட்டுப் பத்தியின் காலாகோலமென, இகழ்ந்தனர் பலர். ஆனுல் அப்பிள்ளைகளின் உண்மையான பத்தியைக் கவனித்து வந்த பையான்கோசி இது தேவ திருவுளத்தின் ஏவுதலால் நடந்த காரியமென தெளிவுற உணர்ந்தார். அப்பெண்மணிகளே அரும்பெரும் பொக் கிஷமாகப் பாவித்து வந்தபடியால் அவர்களை எங்கே இழந்துபோவேனேவென்று பயந்து தமது வீட்டில் ஒரு ஏகாந்த ஸ்தலத்தைத் தயார்செய்து, அவர்கள் தங்கள் இஷ்டம்போல் ஜெபதபங்களைச் செய்யவும், உத்தரவுடன் வெளியே போய் வரவும் கட்டளையிட்டார் இத்தகைய ஏகாந்த ஜீவியத்தில் ஆஞ்செலாளும் அவள் சகோதரியும் சம்மனசுக்களின் ஜீவியம் ஜீவித்து சந்தோஷமாய் வாழ் நாட்களைக் கழித்து வந்தனர். அப்போது ஆஞ்செலா ளின் சகோதரிக்கு வயது பதினைந்கு. இன்னும் புது நன்மை வாங்கவில்லை.

இன்பத்திலும் துன்பத்திலும் தங்கள் ஜீவியகாலத் தில் ஒரு க்ஷணமென்கிலும் பிரியாது உயிரும் உடலும்

போல் ஒன்றித்திருந்த அப்பாலியரைப் பிரித்தருள தேவ திருவுளத்திற்குச் சித்தமாயிற்று. அது யாதெனில்: திடீரென யாரும் நினையாத சமையத்தில் ஆஞ்செலாளின் சகோதரி மரணமானதே. ஐயோ, பரிதாபம்! என் செய்வாள் இப்பாலிய மாது? தாய்தந்தையரைப் பிரிந்த தனக்கு இவ்வுலகில் ஒரு காவல்சம்மனசுபோலிருந்த தன் ஏக சகோதரியையும் இழந்தபோது அவள் அடைந்த ஆறுத் துயரம் எவ்வாறிருக்குமென நாமே யூகித்துக்கொள்ளலாம். அவளுடைய நொறுங்குண்ட இருதயத்தில் ஆயிரக்கணக்கான உணர்ச்சிகள் கிளம்பின. இக்கண்ணீர்க் கணவாயில் தன்னந்தனியே நிற்பதாக உணர்ந்தாள். தாங்களிருவரும் ஒன்ருய்க்கூடி ஜீவித்த சந்தோஷ நாட்கள் ஒரு நொடியில் மறைந்த மாயத்தை எண்ணியெண்ணி அவள் அடைந்த சிந்தாகுலம் பெரிது, பெரிது. ஆனல், இத்துயரில் அவள் காண்பித்த பொறுமை இதிலும் பெரிது. இவ்வளவு கொடுமையாய்த் தன்னை அடித்த தேவ திருக்கரத்தைப் பத்தியுடன் முத்திசெய்தாள். "தேவ திருச்சித்தத்தை எதிர்க்க நான் யார்? என் சகோதரி சர்வேஸ்பரனுக்கே சொந்தமானவள். அவருக்குச் சித்தமான காலத்தில் அவளைத் தம்மிடம் அழைத்துக்கொண்டார். அவருடைய திருநாமம் ஸ்துதிக்கப்படக்கடவதாக" என்று அடிக்கடி சொல்லுவாள் இப்பொறுமைக் களஞ்சியம். என்ருலும் தன் சகோதரியின் ஞாபகம் ஓயாது அவள் மனதை வாட்ட வெகுவாய் மனங்கசிந்து அழுவாள். அச்சமயத்தில் அவள் இருதயத்திற்கு ஆறுதலையும் அமரிக்கையையும் திரும்பக் கொடுக்கக்கூடுமானது "இது தேவ சித்தம்" என்ற ஒரே எண்ணமே. ஆஞ்செலம்மாள் இவ்வாறு தாங்கொண்ணு வருத்தப்பட முக்கிய காரணம்: தன் சகோதரி திடீரென மரித்ததால் அவள் ஆத்தும ஸ்திதி என்னவாயிற்ருே என்னும் கவலையே. ஆகையால் பிள்ளைக்குரிய நம்பிக்கையோடும் உயிருள்ள விசுவாசத்தோடும் நமதாண்டவரை நோக்கித் தன் சகோதரியின் ஆத்தும ஸ்திதியைத் தனக்கு அறிவிக்குமாறு உருக்கமாய் வேண்டிவருவாள். தமதுபேரில் நம்பிக்கை

வைத்திருப்பவர்களைக் கைவிடாதவரான நமது நல்ல ஆண்டவர் இச்சிறுமியின் மன்றாட்டுக்குச் செவிகொடாதிருப்பாரோ? ஆஞ்செலாள் தன் சகோதரியை இழந்த பதினைந்தாம் நாள், அவள் மாமன் அவளுடைய துயரைச் சற்றே மாற்றக் கருதி வயல்வெளிகளில் அவளை அழைத்துச் சென்றார். போகிற வழியில் திடீரென வானத்தில் ஓர் ஜோதிமயமான மேகம் தென்பட, அதன் மத்தியில் சம்மனசுக்களால் புடை சூழப்பட்டு தேவதாய் தன் சகோதரியுடன் தோன்றி "நீ துவக்கிய உத்தம வழியில் நிலைமையாய்த் தொடர்ந்து நடந்தால் நம்மோடு இப்படிப் பட்ட பாக்கியத்தை அநுபவிப்பாய்" என்று சொல்லி மறைந்தாள். இக்காட்சியினால் ஆஞ்செலாளின் இருதயம் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினது.

ஆஞ்செலாளின் சகோதரி திவ்விய சற்பிரசாதநாதரை உட்கொள்ளுமுன் இறந்தபடியால் தனக்கும் அந்நிர்ப்பாக்கியம் நேரிடாதபடி அப்பாக்கியத்தைக் கூடியசீக்கிரம் அடைய ஆசித்துத் தன் மாமனை வெகுவாய் அலட்டினாள். அவளுடைய பத்தி வேகத்தையும் புத்தி ஞானத்தையும் கண்ட பங்குக் குருவானவர் அட்டியின்றி உத்தரவு அளித்தார். அத்திவ்விய பந்தியில் அமர்ந்த நாள்முதல் தாகமுள்ள மானானது நீர்ச்சுனையை நோக்கித் தாவி ஓடுவது போல் சற்பிரசாதநாதரை உட்கொள்ள அடிக்கடி ஆவலாய் ஓடுவாள். இவள் இப்படி மரியாதை வணக்கத்துடனும், பத்தி சிநேகத்துடனும் அடிக்கடி நன்மை வாங்குவதைக் கண்ட சாலோ நகர்வாசிகளின் தளர்ந்துபோன விசுவாசம் திரும்பவும் தழைத்துத் துளிர்த்தது. ஆஞ்செலாளின் இருதயமும் உலகபாச பற்றுதலுக்கு முற்றும் மரித்ததாய் திவ்விய சேசுவின் நிர்மல சிநேகத்தில் ஆழ்ந்தது.

## 2-ம் அதிகாரம்

### சிறு பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தல்

வேத விசுவாசம் தளர்ந்து, பத்தி முயற்சிகள் குறைந்து வந்த அக்காலத்தில், உலகநாட்டமுள்ள ஜனங்களுக்குத் தன் பத்தி சுறுசுறுப்பு ஒரு விகாரமாய்த் தோன்றுதபடி, ஆஞ்செலம்மாள் ஒரு சந்நியாச சபையில் சேரத் தீர்மானித்தாள். ஆகவே, அக்காலத்தில் அவளிருந்த ஊரில் குடும்பங்களில் வசித்துவந்த பத்தியுள்ள கிறீஸ்துவர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்த அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுவது சபையிற் பிரவேசித்தாள். அதில் பிரவேசித்த நாள்முதல் அவளது பத்திவேகம் பதின்மடங்கு அதிகமாக, அநுதினமும் திவ்விய சற்பிரசாத விருந்தை அருந்திவருவாள். தன் ஐம்புலன்களேயும் சுபாவ ஆசை நாட்டங்களேயும் உதாரமாய் ஒறுத்து அடக்கி உலகத்திற்கு முழுதும் மரித்தவளாய் சர்வேசுரனுக்காக மாத்திரம் ஜீவித்துவந்தாள். இப்பரிசுத்த கன்னிகை மாமன் வீட்டிலிருந்தாலும், பிச்சையெடுத்துண்பாள். வெறுந் தரையில் கல்லேத் தலேயணேயாக வைத்து நித்திரை செய்வாள். எப்போதும் மயிர்ச்சட்டை அணிந்திருப்பாள். வெறும் ரொட்டியும் தண்ணீருமே அவளது போஜனம். தபசு காலத்தில் வாரத்திற்கு மூன்று முறை மாத்திரமே சாப்பிடுவாள். இப்படி இவள் செய்துவந்த தபசு போதாதென்றுற்போல் பசாசும் பற்பல சோதனேகளால் அவளே அலேக்கழித்தது. இச்சோதனேகளின் மத்தியிலும் இத்தாழ்ச்சியுள்ள கன்னிகை ஜெயசீலியாய் சிறந்து விளங்குவாள்.

இதுவரை அவளது ஆத்துமாவின்கண் சுரந்தோடிய வரப்பிரசாத ஊற்றுனது இப்போது அதிகமாய்ப் பெருகவே வெள்ளப்பிரவாகத்தால் கரைபுரண்டு ஓடும் நதியைப் போல் அவ்வரப்பிரசாதப் பிரவாகமானது எங்கும் பாய்ந்தோடி சுற்றிலுமுள்ளோருக்கு ஏராளமான நன்மையைச் செய்யத் தொடங்கிற்று. தேவ சிநேகமும், பிறர் சிநேகமும் இணேபிரியா இரு சகோதரிகளல்லவா? ஓர் ஆத்துமா

தேவ சிநேகத்தில் வளரவளர அது பிறர் சிநேகத்திலும் உயர்ந்து எழும்புகிறது. அர்ச். சின்னப்பர் சொல்லுமாப் போல்: "தேவசிநேகமோ பொறுமையுள்ளது, தய வுள்ளது; தேவசிநேகம் பெருமையைத்தேடாது, சுய நலத்தை விரும்பாது." அப்படியே பிறர் சிநேகமும் பொறுமை தயை நிறைந்ததாயும், பெருமையையும், சுய நலத்தையும் நாடாததாயுமிருக்கும். ஏகாந்த ஜீவியம் ஜீவித்து, சர்வேஸ்பரனோடு ஒன்றித்து, தபத்தில் நிலைத் திருப்பது ஆஞ்செலம்மாளுக்கு எவ்வளவு இன்பமான தென்று நமக்குத் தெரியும். ஆனால் பிறருக்கு ஓர் உதவி செய்ய வேண்டியிருப்பின் இம்மதுர இன்பத்தையும் பரித்தியாகம்பண்ணப் பின்வாங்காள். அவளுடைய தபசு எவ்வளவு கடினமானதாயினும் அது அவள் பிறர்பால் காட்டவேண்டிய அன்பையும் மதுரகுணத்தையும் குறைக்க அறியாது. இங்ஙனம் அவள் தன் புண்ணிய வர்த்திப்பின் மட்டிலும், பிறர் இரட்சணியத்தின் மட்டி லும் ஈடுபட்டு உழைத்துவருங்கால் தனது தகப்பனைப் போல் தன்னை இதுவரை கண்காணித்துவந்த அருமை மாமனை இழந்தாள். ஆகவே தனக்கு நெருங்கின உற வினர் சாலோவில் இல்லாமையால் தன் பிறப்பிடமாகிய டெஸன்ஸானோவுக்குப்போய் அங்கு தன் ஊர் ஜனங் களுக்கு அதிக நன்மை செய்யலாமெனக் கருதினாள்.

அக்காலத்தில் வேதவிசுவாசமும், நல்லொழுக்கமு முள்ள குடும்பங்களில் முதலாய் தெய்வபக்தி குளிர்ந்து வருவதையும், குடும்பங்களில் யோக்கியதையும், மரியாதை யும் குறைய, பல சீர்கேடுகள் நுழைந்து தன் தேசத்தின் உந்நத நிலை குன்றிப் போவதையும், ஆஞ்செலம்மாள் சிறு பிராயத்திலிருந்தே கவலையுடன் கவனித்து வந்தாள். இக் கேடுகளுக்கெல்லாம் காரணம் என்னவென்றறிய ஆவ லோடு கடவுளை நோக்கி பிரார்த்தித்துவருவதே அவளு டைய அயரா ஜெபமாயிருந்தது. கடைசியாய் வேத விசு வாசத்தின் வித்தை குடும்பங்களின் மத்தியில் விதைத்து அதை வளரச்செய்வதற்கு அத்தியாவசியமாகிய பெண்

களின் நற்படிப்பினைக் குறைவே இதன் காரணமென தேவ அருளால் கண்டறிந்தாள். உடனே பெண் கல்வியின் அவசியத்தைப்பற்றி தன் தோழிகளுக்கு வெளியிட்டு அவர்களும் தன்னோடு ஒத்து உழைப்பதாயிருந்தால் தன் தந்தையின் வீட்டை ஓர் பாடசாலையாக உபயோகிக்கலாமென்றும் அறிவித்தாள். இதே கருத்துடையவர்களாயிருந்த அவளுடைய தோழிகளில் நால்வர் சந்தோஷத்துடன் பெற்றோரின் உத்தரவுபெற்று ஆஞ்செலம்மாளுடன் 1495-ம் வருஷம் டெஸன்ஸானோ ஊருக்குப் புறப்பட்டார்கள். அப்போது ஆஞ்செலம்மாளுக்கு வயது சுமார் 21. அவளுடைய ஊரார் அவளை வெகு சந்தோஷத்தோடு வரவேற்று உபசரித்தனர்.

இவ்வுத்தம பெண்மணிகள் ஐவரும் தாங்கள் துவக்கிய பிறர்சிநேக வேலையில் அநுகூலம் பெற வேண்டுமாகில் முதல் முதல் அவ்வூராரின் அன்பையும் அபிமானத்தையும் அடைய வேண்டுமென்னும் உண்மை அறியாதவர்களல்ல. ஆகவே முதல் முதல் ஏழைகளுக்கு உதவி செய்வதில் தங்களைச் செலவிட்டு விசுவாசிகளின் தருமத்தால் உயிர் பிழைத்து வந்தனர். அவர்கள் அடிக்கடி கோவிலுக்குப் போய்த் தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று வருவதைக்கண்ட ஜனங்கள் அவர்கள் மட்டில் மேலான எண்ணமுற்றார்கள். முக்கியமாய் ஆஞ்செலம்மாளின் அடக்க ஒடுக்கமும், பத்தியுமே எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தன. அவள் சம்பாஷணையின் விவேகமும் மதுரகுணமும் சகல இருதயங்களையும் அவள்பால் இழுத்தன. ஏழைகள், தனவந்தர் என்ற வித்தியாசமின்றி எல்லோர்க்கும் ஓர் அன்புள்ள தாயைப்போல் பட்சம் காட்டினாள். ஏகாந்த ஜீவியத்தில் ஒதுங்கியிருக்க அணைகடந்த ஆவலுற்றவளாயினும் பிறர் நலத்தின் பொருட்டு அந்த ஆசையையும் அடிக்கடி பரித்தியாகம் செய்து வருவாள்.

ஒரு நாள் ஆஞ்செலம்மாள் தன் சகோதரிகளுடன் காட்டுப்பக்கமாய் நடந்துசெல்லும்போது சற்றே பின் தாங்கி ஓரிடத்தில் ஜெபத்திலமர்ந்து, சர்வேஸ்பரன் சிறு

பெண்களின் படிப்பினைக்காக தான் செய்யச் சித்தமான வேலையைச் சரிவர செய்து முடிக்க தனக்கு வேண்டிய ஞானப்பிரகாசத்தை அருளுமாறு உருக்கமாய் மன்றாடினாள். இச்செபம் முடியாமுன்னரே, ஆஞ்செலாள் ஒரு காட்சி கண்டாள். யாக்கோப் என்னும் பிதாப்பிதாவானவர் கண்டபடி ஒரு பிரகாசமான ஏணி வானமண்டலத்தில் சாற்றப்பட்டிருப்பதையும் அதின் வழியாய் அழகிய முடி தரித்த ஓர் கன்னியர் கூட்டம், இனிமையான பாடல்களைப் பாடிக்கொண்டுவரும் அநேக சம்மனசுக்களால் புடை சூழப்பட்டு, இருவர் இருவராய் மேலே ஏறுவதையும் கண்ணுற்றாள். அதே சமயத்தில் “ஆஞ்செலா, நீ இக் காட்சியிற் கண்ட கன்னியர்கள் அடங்கிய ஒரு சபையை ஏற்படுத்துமுன் இவ்வுலகத்தைவிட்டு நீங்கமாட்டாய்” என்ற ஓர் சத்தமும் கேட்டது. உடனே ஆஞ்செலாள் சாஷ்டாங்க தெண்டனிட்டு, “ஆண்டவரே, இங்ஙனம் நீர் என்னைச் சந்திக்க நான் எப்படி பேறுபெற்றேன்? இப் பெரிய அலுவலைச் செய்து முடிப்பது என்னால் ஆற்றும் கருமமோ? உமது நாமத்தை என் சொந்த ஊரார் சங்கித்து ஆராதிக்கச் செய்வதே என் அலுவலென இதுவரை எண்ணியிருந்தேன். ஆயினும் உமது சர்வ வல்லமையில் என் நம்பிக்கையாவும் வைத்து நீர் அழைக்கும் இடமெல்லாம் நான் உம்மைப் பின்தொடரத் தயாராயிருக்கிறேன்” என மொழிந்தாள். உடனே தரிசனம் மறைய அவளுடைய சகோதரிகளும் அவளை அணுகிவந்தனர். ஆஞ்செலாளின் தாழ்ச்சியானது அவள் கண்ட காட்சியை மறைக்க அவளை ஏவினாலும் தேவ மகிமையின் பற்றுதல் அதைத் தன் சகோதரிகளுக்கு வெளிப்படுத்த அவளை வெகுவாய்த் தூண்டினது. ஆகவே தான் கண்ட காட்சியைத் தன் சகோதரிகளுக்குத் தாழ்மையுடன் வெளிப்படுத்தி சர்வேசுரன் தங்களிடம் விரும்பியதைத் தாராள மனதுடன் நிறைவேற்றுமாறு புத்தி புகட்டினாள். இதைக் கேட்ட நால்வரும் சந்தோஷித்துத் தாங்களும் ஏற்கனவே ஆஞ்செலம்மாள் கண்ட கன்னியர் கூட்டத்தில் சேர்ந்துவிட்டதாக எண்ணி ஆனந்தித்தனர்.

ஆயினும் தன் சொந்த ஊரில் இத்தகைய ஓர் சபையை ஏற்படுத்துவது இயலாத கருமமென ஆஞ்செலாள் நன்கறிந்து சர்வேஸ்பரனே அச்சபையின் ஸ்தாபகத்திற்கேற்ற எத்தனங்களைத் தனக்கு அருளுமட்டும் பொறுமையுடன் காத்திருந்தாள். ஆயினும், தான் தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படிந்ததை எண்பிக்க தங்களுக்குள்ளே ஒருவித நவசந்நியாச ஜீவியம் ஜீவித்து, சிறுவர்களைச் சேர்த்து ஞானோபதேசம் கற்பிப்பதிலும், வியாதிக்காரரைச் சந்தித்து ஆறுதலளிப்பதிலும், வாலிபர்களுக்கும், தொழிற்சாலையில் வேலை செய்பவர்களுக்கும் புத்தி சொல்லி அவர்களை இரட்சணிய பாதையில் திருப்புவதே அலுவலாயிருந்தார்கள். இம்மகத்தான அப்போஸ்தலத்துவத் தொழிலால் டெஸன்ஸானோ நகர்வாசிகள் அடைந்த நன்மை சொற்பமல்ல. தங்கள் பரிசுத்ததனத்தைக் காப்பாற்றி தங்கள் ஜீவியத்தை நல்வழியில் திருப்பின வாலிபப் பெண்களும், உலக மாயதந்திரங்களிலிருந்து காப்பாற்றப்பட்ட பக்தி தளர்ந்த கிறீஸ்துவர்களும் அனந்தம். சிறுவர்கள் வேத சத்தியங்களில் தெளிவடைய, அறிவீனம் நீங்கி, பத்தி சுறுசுறுப்பும் நல்லொழுக்கமும் புது உயிர்பெற்று எழுந்தன. இவ்வுயர்ந்த அலுவலின் மாட்சி எங்கும் பரவவே ஆஞ்செலாள் எல்லாராலும் புகழப்பட்டு, பிரசித்த மரியாதை பெற்றுவந்தாள். ஆனால், இத்தாழ்ச்சியுள்ள கன்னிகை எல்லாவற்றையும் சர்வேஸ்பரனின் மகிமைக்காக ஒப்புக்கொடுத்து, அவருடைய உதவியின்றி தன்னால் ஒன்றும் முடியாது என்று சொல்லிவருவாள்.

இவ்வாறு பல வருடங்கள் கழிந்தன. தான் ஸ்தாபிக்கவேண்டிய சபைஸ்தாபகம் ஆஞ்செலாள் ஞாபகத்தை விட்டு நீங்கவில்லை. ஆனால் டெஸன்ஸானோ அதற்கு ஏற்ற இடமல்லவென்றும், அதற்குப் பதினாறு மைல் தூரத்திலுள்ள பிரெஸியா நகரமே அதற்கேற்ற இடமெனவும் தீர உணர்ந்தாலும் தேவ திருவுளத்தின் ஏற்பாடுகளுக்குக் காத்திருந்தாள். இப்படி இருக்குங்கால், ஆத்தும இரட்சணிய ஆவலால் விளங்கினாள். இக்கன்னிகையின் நாமம்

எங்கும் பிரபலியமாகவே பற்பல இடங்களிலிருந்து அநேகர் இவளிடத்தில் ஆலோசனே கேட்கவும் ஆறுதலடையவும் இவளேத் தேடி வந்தார்கள். இப்படி வந்தவர்களில் பிரெஸியாவிலிருந்து வந்த பென்றகோலியென்ற தனவந்தர் முக்கியமானவர். இவர் கோடைகாலத்தை டெஸன்ஸானேவின் சமீபத்திலுள்ள தமது தோட்ட மாளிகையில் செலவிடுவது வழக்கம். இக்காலங்களில் ஆஞ்சேலம்மாள் தான் பிரெஸியாவில் ஸ்தாபிக்க நினைத்திருந்த சபைக்கு இத்தனவந்தருடைய ஆதரவின் அவசியத்தை உணர்ந்து வாரத்திற்கு ஒரு முறை அவ்விடத்தில் கூடிய ஜனங்களுக்குப் புத்தி சொல்லிவருவாள். 1516-ம் ஸூ பென்றகோலியின் திரண்ட ஆஸ்திக்கு உரியவர்களான அவருடைய இரு பெண் மக்களும் திடீரென இறந்துபோக, இதனல் ஆருத் துயரில் அமிழ்ந்தின பெற்ருேர் ஆஞ்செலம்மாளின் ஆறுதலே விரும்பி அவளேத் தமதில்லத்திற்கு வரும்படி வெகுவாய் வேண்டினர். இவ்வேண்டுகோளுக்கிணங்கி தான் துவக்கின வேலேயைத் தொடர்ந்து நடத்தும்படி தன் சகோதரிகளுக்கு வேண்டிய புத்திமதிகள் சொல்லிவிட்டு பிரெஸியாவிற்குப் புறப்பட்டாள்.

---

## 3-ம் அதிகாரம்

## பிரேஸியாவில் சபை ஸ்தாபிக்க முயற்சிகள்

"ஆண்டவருடைய வழிகள் ஆச்சரியத்திற்குரியன." எவ்வித துன்பங்களிலிருந்தும் நன்மையைப் பெறுவிப்பவரான கடவுள் இக்குடும்பத்திற்கு நேர்ந்த துன்பத்தைக் கொண்டு ஆஞ்செலம்மாள் தன் வாசஸ்தலத்தைப் பிரெஸியாவில் நிலேவரமாய் ஸ்தாபிக்கச் சித்தமானர். "அழுவார்களோடு அழுங்கள், மகிழ்வாரோடு மகிழுங்கள்" என்ற அப்போஸ்தலருடைய வாக்குப்பிரகாரம் மக்களே இழந்த மாதா பிதாக்களின் மனத்துயரில் தானும் அநுதாபித்து நாளாவட்டத்தில் அவர்கள் தேவ சித்தத்திற்கு அமையுமாறு நற்புத்திகளேப் புகட்டிவந்தாள்.

ஆஞ்செலாள் அங்கு சேர்ந்த சில தினங்களுக்குள்ளாக டெஸன்ஸானேவில் அவள் கண்ட காட்சியின் ஞாபகம் அவள் மனதை வெகுவாய் வாட்டினது. கோவிலிலும் சிற்றறையிலும் ஜெபஞ்செய்யும்போதும் இன்னும் பற்பல வேலை செய்யும் சமயத்திலும் அவள் முன் கண்ட ஆச்சரியமான ஏணியும் அதின்மேல் ஏறிய கன்னியர்களின் கூட்டமும் சம்மனசுக்களின் தோற்றமும் அவள் கண் முன்னே இடைவிடாமல் நிற்க, முன் அவள் கேட்ட அசரீரி வாக்கும் இடைவிடாமல் அவள் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. இந்நினைவால் இக்கன்னிகையின் மனம் வெகுவாய்க் கலங்க, இரவில் ஒரு நிமிஷமுதலாய் நித்திரையின்றி வெகுவாய்க் கஷ்டப்பட்டாள். ஆயினும் இது தேவ வரப்பிரசாதத்தின் திருச்செயலென்று நன்குணர்ந்த ஆஞ்செலாள், ஆண்டவரை நோக்கி: "என் ஆண்டவரே, நான் என்ன செய்யவேணுமென்று சித்தமாயிருக்கிறீர்? ஆண்டவரே பேசும், உமது ஊழியன் செவி கொடுக்கிறேன்" என்னும் சாமுவேல் தீர்க்கதரிசியின் வாக்கியத்தைக் கூறவே அவள் இருதயத்திற்குச் சமாதானமும் அமரிக்கையுமுண்டாயிற்று. சபையின் ஸ்தாபகத்திற்காக முயற்சி எடுக்கத் தொடங்கினாள். ஆனால் அப்போது தான் வசித்துவந்த பென்றகோலியின் இல்லம் தன் கருத்தை நிறைவேற்ற தகுந்த இடமல்லவென்றுணர்ந்து, அதற்கு ஏற்ற ஓர் இடத்தைத் தேடிக்கொண்டேயிருந்தாள். ஆயினும் இதுகாறும் தன் இரகசியத்தை வெளியிட்டவளல்ல. அக்காலத்தில் பிரெஸியாவில் மார்க் அந்தோனி ரொமானோ என்ற ஒரு பத்தியுள்ள பிரபல வியாபாரி தான் இதுவரை செய்த அலுவலை விட்டு, தேவ ஊழியத்தில் தன் மீதி நாட்களை செலவழிக்க விரும்பினான். பென்றகோலியின் சிபார்சினால் அவ்வியாபாரியின் பெரிய மாளிகையின் ஒரு பாகம் ஆஞ்செலாளுக்குக் கொடுக்கப்பட்டது. இப்புதிய வாசஸ்தலத்தில் இவள் தான் முன்பு அநுசரித்துவந்த ஜெபதபங்களை எல்லாம் திரும்பவும் அனுஷ்டிக்க துவக்கினாள். கோவிலுக்குப் போகிறதற்கு மாத்திரம் வீட்டிலிருந்து வெளியே வருவாள். அச்சமயங்

களில் அவளிடம் விளங்கிய சிறந்த அடக்க ஒடுக்கம் அவ்வூர் பெண்களுக்கு ஒரு உத்தம மாதிரிகையாயிருந்தது. அவளோடு சம்பாஷிக்க யாவரும் ஆசைப்பட்டு அவளை நாடிவருவர். அவள் சர்வேசுரனைப்பற்றிப் பேசுவதைக் கேட்டவர்களின் இருதயங்களும் தேவசிநேக அக்கினியால் பற்றி எரியத் துவக்கின. ஆகவே அவ்வூர் ஜனங்களெல்லோரும் அவளை மோக்ஷத்தினின்று இறங்கிவந்த ஓர் சம்மனசென எண்ணி மதித்துவந்தனர்.

தன்னைத் தாழ்த்துகிறவனை உயர்த்துகிறவராகிய சர்வேஸ்பரன் இத்தாழ்ச்சியுள்ள கன்னிகைக்கு அநேக தேவ வரங்களை அருளச் சித்தமானார். அவள் அன்னிய பாஷைகளையுங் கல்வி சாஸ்திரங்களையும் படியாதிருந்தாலும், இலத்தீன் பாஷையைக் கண்டுபிடித்து மொழிபெயர்ப்பாள். வேதசாஸ்திரத்தை நன்றாயுணர்ந்து அதின்மேல் உச்சிதமானவிதமாய்ப் பேசுவாள். அதைக் கண்டு சாலோ, பதுவா, டெஸன்சானோ முதலிய பல இடங்களிலிருந்து கற்றறிந்த நிபுணர்களும் பெயர்பெற்ற வேதசாஸ்திரிகளும், வாய்ச்சாலக பிரசங்கிகளும் அவளிடத்தில் ஆலோசனை கேட்குமாறு அவளை அண்டிவந்து அவளுடைய கல்வித்திறமையையும், வேத அறிவையும் கண்டு ஆச்சரியப்பட்டனர். இதுவுமன்றி விரோதிகளைச் சமாதானப்படுத்துவதிலும் இவள் பிரக்யாதிபெற்றவளாயிருந்தாள். பிரெஸியாவில் உயர்ந்த கோத்திரத்தைச் சேர்ந்த இரு துரைமக்கள் தங்களுக்குள் கொடிய பகை வர்மமாயிருந்தனர். இவர்களுக்குள் சமாதானத்தை உண்டாக்க அவர்களுடைய சிநேகிதர்கள் பட்ட பிரயாசை யாவும் நிஷ்பலமாயின. கடைசியாய் இவ்விஷயம் ஆஞ்செலாளின் காதுக்கெட்ட, ஆஞ்செலாள் அதிக பக்தி உருக்கத்துடன் வேண்டிக்கொண்டு, அவர்கள் இருவர் வீட்டிற்கும் அடிக்கடி சென்று, அவர்களுக்கு நற்புத்திமதிகளைப் புகட்டி இருவரும் குறிக்கப்பட்ட ஒரு நாளில் தன் இல்லத்துக்கு வரும்படியாக எற்பாடு செய்தாள். இச்சந்திப்பின் துவக்கத்தில் அவ்விரு விரோதிகளும் காட்டிய கோபாவேஷத்

தைக் கண்ணுற்ற ஆஞ்செலாள் மிகவே மனம் வருந்தினள். ஆனால் சீக்கிரத்தில் அவள் தன்னுடைய சாதுரியமும், சாந்தமுமான அமிர்த மொழிகளால் அவ்விருவரையும் வென்று, ஒருவர் ஒருவருடைய குற்றங்களை மன்னிக்குமாறு செய்து, அவர்கள் இருவரும் சமாதான முத்தம் கொடுப்பதைக் கண்டு மனமுவந்து கடவுளை தோத்தரித்தாள்.

---

## 4-ம் அதிகாரம்

### திருயாத்திரைகள்

ஆஞ்செலாள் இவ்வாறு பிரெஸியாவில் பிறர்சிநேகக் கிரிகைகளில் ஈடுபட்டு உழைத்துவருங்கால் டெஸன்ஸானோவில் தங்கள் பிரிய தாயை விட்டு, வெகுகாலமாய் பிரிந்துநின்ற சகோதரிகள் நால்வரும் சபை ஸ்தாபகத்தைப் பற்றி ஆஞ்செலாளை இடைவிடாது தூண்டிக்கொண்டே இருந்தனர். என்றாலும், அவளது ஆழ்ந்த தாழ்ச்சியானது, அற்ப சிருஷ்டியாகிய தன்னைக்கொண்டு நமது நல்ல ஆண்டவர் இத்தகைய மகத்தான ஓர் கருமத்தைத் துவக்கி முடிக்கக்கூடுமென்று நம்புவதற்கு இடங்கொடுக்கவில்லை. ஓர் சபையின் ஸ்தாபகி என்ற பேர் அவளை வெகுவாய் கலக்கமுறச்செய்தது. அப்படியிருந்தபோதிலும் அடுத்த நிமிஷத்தில் தான் சர்வேஸ்பரனுடைய சர்வவல்லமையின் மட்டில் கொண்ட அவநம்பிக்கையினிமித்தம் மனமுருகிப் பிரலாபித்து, "ஆண்டவரே, உமதுபேரில் என் நம்பிக்கையை வைத்தேன், ஒருக்காலும் நான் கலங்காதபடி கிருபை புரியும்" என்று ராஜ தீர்க்கதரிசியோடு சொல்லுவாள். இவ்விதமாய் ஓர் சமயம் அவநம்பிக்கையாலும் மற்றோர் சமயம் நம்பிக்கையாலும் கலக்கமுற்று வாதிக்கப்படும் தன் ஆத்தும அமரிக்கையை விரும்பியும் தன் மட்டில் தேவசித்தம் என்னவென்று தெளிவுற உணரவும் நமதாண்டவர் பிறந்து வளர்ந்து உபதேசஞ் செய்து தன்னுயிரையே தியாகஞ் செய்த பரிசுத்த ஸ்தலங்களைத் தரிசிக்க பெரிதும் ஆவலுற்றாள்.

அவளுடைய பந்துக்களில் ஒருவரும் அவள் வசித்திருந்த வீட்டின் சொந்தக்காரன் ரோமானோ என்பவரும் இத்திருயாத்திரையில் அவளுடன் செல்ல மூவருமாக 1524-ம் வூ ஜூனின் மாதம் பிரெஸியாவை விட்டுப் புறப்பட்டு வேனிஸ் வந்து சேர்ந்தார்கள். அவ்வழகிய பட்டணத்தின் உந்நத தேவாலயங்களையும் பெருமை வாய்ந்த சந்நியாச மடங்களையும் சந்திப்பதில் சில தினங்கள் கழிந்தன. கடைசியாய் தேவ நற்கருணைத் திருநாளன்று இம்மூன்று திருயாத்திரிகளும் சற்பிரசாதம் அருந்தி, பரிசுத்த கன்னித்தாயின் பாதுகாவலில் தங்களின் கப்பல் பிரயாணத்தைத் துவக்கினர். மனோகரமாய்ப் பாய்விரித்தோடின மரக்கலமானது யாதொரு ஆபத்தின்றி எட்றியாட்டிக்கடலைக் கடந்து மத்தியதரைக்கடலின் வழியாய் வெகு கெம்பீரமாய்ச் சென்றது. சந்தோஷமும் சமாதானமும் அங்குள்ள பிரயாணிகளின் இருதயங்களை ஆட்கொள்ள, சகலமும் இனிது நடைபெறுமென்ற நம்பிக்கையுடன் தங்கள் பிரயாணத்தை நடத்துங்கால், நினையாது தோன்றி மறையும் மின்னலைப்போல் அவர்கள் சந்தோஷம் யாவும் மாறும்படியான துயரசம்பவம் நடந்தது. அது யாதெனில்: திடீரென ஆஞ்செலாள் தன் கண் பார்வையை இழந்த காக்ஷியே. இத்துயர சம்பவத்தைக் கண்ணுற்ற பிரயாணிகள் அனைவரும் திகிலும் ஆச்சரியமுமுற்றுத் தங்களுக்கு என்ன நேரிடுமோவென்று வெருவாய் மனங்கலங்கி நின்றனர். தன் திவ்ய அன்பரான திவ்ய சேசுவின் திருப்பாடுகளின் ஸ்தலங்களைத் தரிசிக்க அவாவுற்றுப் புறப்பட்ட கன்னிகையின் மனம் இச்சம்பவத்தால் எவ்வித துயரத்தில் மூழ்கியிருக்குமென எவ்வாறு உரைக்கக்கூடும்! அவளுடன் சென்ற பிரயாணிகள் அவள் கண்பார்வையை இழந்ததால் அப்பிரயாணத்தில் அவளுக்கு நேரிடும் பற்பல கஷ்டங்களை எடுத்துரைத்து அவள் வெனீஸுக்குத் திரும்பிச்சென்று தன் கண்ணைச் சுகப்படுத்தி வருமாறு வேண்டினர். ஆனால் தன்னை இதுவரையில் நடத்திவந்த தேவ திருக்கரத்தின்மேல் தன் நம்பிக்கையாவும் வைத்து பிரயாணத்தைத் தொடர்ந்து

நடத்துவதே உசிதமென தீர்மானித்த நமது அர்ச்சியசிஷ்டவள் அவர்களை நோக்கி: "நமது நல்ல ஆண்டவர் என்னைச் சாங்கோபாங்க ஜீவியத்தில் நடத்துவதற்காகவே இப்பெரும் சோதனையை எனக்கு வரவிட்டிருக்கிறார். என் இரட்சகரின் ஜீவியத்தால் அர்ச்சிக்கப்பட்ட அப்பரிசுத்த ஸ்தலங்களை என் சரீரக்கண்களால் கண்டு ஆனந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடையாது, மெய்தான். ஆனால் என் அன்பரின் அமிர்த பிரசங்கங்களையும், அரிய புதுமைகளையும், மிகுந்த நிந்தை அவமானங்களையும், கொடிய பாடுகளையும் பார்த்த அப்பரிசுத்த பூமியைத் தொழுவேன். என் புத்தியின் கண்ணால் அதைத் தரிசிப்பேன். நான் அவ்விடத்தில் அதிக வருத்தப்பட நேரிடுமாகில் என் நேச சேசுவின் பாடுகளில் பங்கடையும் பாக்கியம் கிடைத்ததைப்பற்றி மனமகிழ்வேன். நான் அவ்விடத்தில் மரிக்க வேண்டுமாகில், என் ஜீவிய பலியை என் சேசுவோடு கல்வாரிமலையில் சமர்ப்பிக்கும் மகிமை கிடைத்ததைப்பற்றிச் சந்தோஷிப்பேன்" என்று சொல்லி எல்லாரையும் உற்சாகப்படுத்திக் கப்பலை யூதேயாவை நோக்கி நடத்தும்படி கேட்டுக் கொண்டாள். இதைக் கேட்ட அனைவரும் முக்கியமாய் கப்பல் மாலுமியும் தைரியங்கொண்டு மரக்கலத்தைச் செலுத்த அதுவும் சிந்தாத்திரையாய் கரை சேர்ந்தது.

கப்பலை விட்டிறங்கினதும் ஆஞ்செலாள் சாஷ்டாங்க தெண்டனிட்டு வணங்கி, நமது நேச ஆண்டவரின் பாதவடிகளால் பரிசுத்தமாக்கப்பட்ட பூமியை முத்திசெய்து, தனது தாழ்மையுள்ள நன்றியறிதலைக் கடவுளுக்குச் செலுத்தினபின், ஜெருசலேமுக்குக் கால் நடையாய்ப் பிரயாணப்பட்டாள். நமது நாதன் மரணாவஸ்தைப்பட்ட ஒலிவமலை, மரணமடைந்த கல்வாரிமலை, அவர் திருச்சடலத்தை க்ஷேமித்துவைத்த கல்லறை முதலிய திருஸ்தலங்களைச் சேவித்த பின்னர், அவர் அன்புடன் சென்று உபதேசம் புரிந்து பற்பல புதுமைகள் செய்த இடங்களையும், அவர் மறுரூபமான தபோர் மலையையும், கடைசியாய் பரலோகத்திற்கு ஆரோகணமான மலையையும் சந்தித்த

னள். ஆஞ்செலாளின் சரீரக்கண்களுக்கு இவ்விடங்களெல்லாம் மறைபட்டிருந்தபோதிலும் அவள் ஆத்துமாவில் ஒளிர்ந்த தேவ அருள் பிரபையினுல் அவள் புத்தியின் கண்கள் திறக்க எல்லாவற்றையும் வெகு தெளிவுறக் கண்டறிந்தாள். ஒவ்வொரு ஸ்தலத்திலும் அவள் காண்பித்த பக்தி உருக்கமும், அவள் மாசற்ற முகத்தில் தோன்றிய தேவ சிநேக காந்தியும், அவள் வாயிலிருந்து வந்த திவ்விய வசனங்களும், அவள் இருதயத்திலிருந்து எழும்பிய மனஸ்தாப உச்சாரணங்களும் அவளைச் சூழ்ந்து நின்ற திருயாத்திரிகளின் இருதயத்தில் தேவ விசுவாசத்தைத் தூண்டின. முக்கியமாய் கல்வாரிமலையில் அவள் காண்பித்த தேவநேச உணர்ச்சிகளை இங்கு எடுத்துரைப்பது அசாத்தியம். ஆங்குள்ள சகல பொருட்களும் நமது திவ்விய இரட்சகரின் அணைகடந்த அன்பை அவளுக்கு எடுத்தோதும் அத்தனை வாய்ச்சாலக பிரசங்கிகள்போல் தோன்றின. நமதாண்டவர் சிலுவையிலிருந்து அருளிய அமிர்த வசனங்கள் அவள் செவியில் இடைக்கிடை தொனித்துக் கொண்டேயிருந்தன. அப்பரிசுத்த நகரில் கட்டிக்கொள்ளும் பாவங்களையெல்லாம் தன் கண்ணீரால் கழுவித் துடைக்க விரும்பினுள். நமது இரட்சக பெருமான் மன்னுயிரை மீட்கத் தன்னுயிரைக் கொடுத்த கல்வாரிமலையிலேயே தானும் துயரத்தாலும் சிநேகத்தினுலும் மரிக்க வெகுவாய் ஆவலுற்ருள். இம்முயற்சிகளால் சிலுவையின் நேசம் அவள் இருதயத்தைக் கவர சர்வேஸ்பரனின் மகிமைக்காக சகல துன்பங்களையும் நிந்தைகளையும் அநுபவிக்கத் திடனடைந்தாள். தன் மீதியான வாழ்நாட்களை ஜெருசலேமிலேயே செலவழிக்க அவள் எவ்வளவுதான் ஆசித்தாலும், உன்னத கடவுளின் திருச்சித்தத்தை நிறைவேற்றும்படியாக பிரெஸியாவுக்குப் பயணப்படவேண்டியதாயிற்று.

இப்பிரயாணத்தில் அநேக கனவான்கள் அவளுடன் புறப்பட்டார்கள். அவர்களில் முக்கியமானவர் அக்காலத்தில் திருச்சபையை ஆண்டுவந்த ஏழாவது கிளெமெந்து என்னும் பாப்பானவரின் பொக்கிஷதாரரான பவுல் அப்பு

லியா என்பவர். அவர்களின் மரக்கலமானது காந்தியா என்ற தீவின் துறைமுகத்தில் ஆகார வஸ்துக்களைச் சேகரிக்கவேண்டி ஒருநாள் தங்கவேண்டியதாயிருந்தது. ஆங்குள்ள கோவிலொன்றில் நமதாண்டவரின் சுரூபமொன்று புதுமைகளால் பிரபலியப்பட்டிருப்பதைக் கேள்வியுற்ற ஆஞ்செலாள் அச்சுரூபத்தைச் சந்திக்க ஆசைகொண்டாள். இச்சங்கதி வெளியாகவே, கப்பலிலுள்ள அநேகரும் அவளுடன் சென்றனர். அக்கோவிலை அடைந்த மாத்திரத்தில் நமது அர்ச்சியசிஷ்டவள் மேற்சொல்லிய சுரூபத்தின் முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்து: "ஆண்டவரே, சர்வேசுரனுடைய மகிமைக்கும் என் ஆத்தும இரட்சணியத்திற்கும் உதவியாயிருந்தால் எனக்கு கண் பார்வையை அளித்தருளும்; ஆயினும் அற்ப சிருஷ்டியாகிய என் மனதின்படி அல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று பூரண நம்பிக்கையுடனும், கல்லான மனதையும் கரைக்கக்கூடிய உருக்கத்துடனும் முதல் தடவையாக தன் சுகத்திற்காக மன்றாடினாள். இதைக் கண்டோர் மனங் கசிந்து கண்ணீர் உகுத்தனர். ஆ! ஆச்சரியமே! அவர்கள் கஸ்தியெல்லாம் சந்தோஷமாய் மாற ஆஞ்செலாள் ஆச்சரியமான விதமாய் சுகமடைந்தாள். நமது நல்ல ஆண்டவர் ஆஞ்செலம்மாளுக்கு அநுக்கிரகித்தருளிய இவ்வற்புத வரத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர் ஒருவருமில்லை. யூதேயாவின் திருஸ்தலங்களைக் காண மிகுந்த ஆவலுடன் வந்த கன்னிகையின் கண்கள் அவ்வினிய காட்சிகளைக் கண்டு களிக்காதபடி அவ்விடத்தில் மறைக்கப்படவும், இப்போது திறக்கப்படவும் சித்தமான தேவ திருவுளத்தின் இரகசிய ஞானத்தை ஒருவராலும் கண்டுபிடிக்கக்கூடவில்லை. என்றாலும், அது அவளுடைய உயிருள்ள விசுவாசத்தை உலகத்துக்கு வெளியாக்கும் எத்தனமாயிருக்கும்படி கடவுள் சித்தமானார்.

இதினிமித்தமாக ஆஞ்செலாளின் மகிமையும் புகழும் எங்கும் பிரபலியமாகவே, எல்லாரும் அவளை ஒரு அர்ச்சியசிஷ்டவளாக மதித்து, அவளுடைய

TA
10-54

பாதுகாப்பில் யாதொரு அபாயமின்றி கரை சேரலாமென்ற நம்பிக்கையுடன் வேனிஸை நோக்கி கப்பலைச் செலுத்தினர். இத்துடன் இன்னும் இரண்டு கப்பல்களும் புறப்பட்டன. மூன்று கப்பல்களும் சந்தோஷமாய்ப் பாய்விரித்தோடின. வேனிஸ் துறைமுகம் தூரத்தில் காணப்பட பிரயாணிகள் இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் கரை பிடிக்க இருந்தனர். ஆனால் ஐயோ, மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்றாற்போல், ஒரு கடும்புயல் கிளம்ப கடலின் அலைகள் மலைபோல் எழுந்து கீழே விழ, மூன்று கப்பல்களும் வெகுவாய் அலைக்கழிக்கப்பட்டன. இவைகள் படும் போராட்டத்தை வேனிஸ் நகர்வாசிகள் கரையில் நின்று கண்கலங்கப்பார்த்து உதவிசெய்ய முடியாமல் பரிதபிப்பதின் கூக்குரல் அலைகளின் சப்தத்தைக்காட்டிலும் அதிக பேரிரைச்சலாயிருந்தது. இத்தகைய கூக்குரலின் மத்தியில் மற்ற இரு கப்பல்களும் சமுத்திரத்தில் அமிழ்ந்திப்போயின. ஆனால் நமது திருயாத்திரிகள் ஏறியிருந்த கப்பலோ ஒன்பது நாட்களாய்க் கொந்தளிப்பான கடலில் வெகுவாய் அலைக்கழிக்கப்பட, நமது அர்ச்சியசிஷ்டவள் தன் கரங்களை வானத்தை நோக்கி உயர்த்தி உருக்கத்தோடு மன்றாடுவதே அலுவலாயிருந்தாள். ஒன்பதாம் நாள் அச்சிறிய மரக்கலமானது ஒரு கரையில் ஒதுக்கப்படுவதைக் கண்டு ஆனந்தித்தனர். ஆனால் அவர்கள் ஆனந்தம் அங்கலாய்ப்பாக மாற, சில அஞ்ஞான கடற்கொள்ளைக்காரர் அக்கப்பலைத் தாக்க நெருங்கி வருவதைக் கண்ட திருயாத்திரிகள் நம்பிக்கையிழந்து கஸ்தியில் மூழ்கினர். ஆஞ்செலாள் மட்டும் தேவ பராமரிப்பின்மட்டில் தன் நம்பிக்கையாவும் வைத்து மற்றவர்களையும் உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தாள். அவளது நம்பிக்கை வீண்போகவில்லை. அத்துஷ்டர்கள் எதிர்காற்றினால் கஷ்டமுற, நமது திருயாத்திரிகள் சிந்தாத்திரையாய் துறைமுகம் சேர்ந்தனர். உடனே அனைவரும் கோவிலுக்குச் சென்று சர்வேஸ்பரன் தங்களை இப்பெரிய துன்பத்திலிருந்து காப்பாற்றியதற்காக நன்றி செலுத்தினர்.

வேனிஸிலுள்ள திருக்கல்லறைக் கோவிலைச் சேர்ந்த ஒரு கன்னியர் மடத்தில் ஆஞ்செலாள் சிலநாள் தங்கியிருந்தாள். அதற்குள்ளாக நமது அர்ச்சியசிஷ்டவளின் புண்ணிய ஜீவியமும், திருயாத்திரையில் சம்பவித்த அற்புதங்களும் பட்டணமுழுதும் பரம்பவே எவ்விடமும் அவள் பேச்சாகவே இருந்தது. அப்பட்டணத்திலுள்ள உயர்குல சீமாட்டிகள் அவளைக் கண்டு பேச ஆவலுற்று மடத்திற்கு இடைவிடாது வந்துகொண்டே இருந்தனர். இவர்களை எப்படி சமாதானங்கூறி அனுப்புவதென திகைத்து நின்ற அம்மடத்து சிரேஷ்ட தாயார் ஆஞ்செலம்மாள் தியானம் செய்வதாகச் சொல்லி அனுப்பிவிடுவாள். ஒரு தடவை அந்நகர் இராஜாங்க உத்தியோகஸ்தர் பலர் அப்புண்ணியவதியைச் சந்தித்து அவள் வேனிஸிலேயே தன் வாசஸ்தலத்தை ஸ்தாபிக்கும்படியாக மிகவும் வேண்டினர். தேவசித்தத்தை நிறைவேற்றுவதையே சிரமேற்கொண்டொழுகிய இப்பரிசுத்த கன்னிகாரத்னம், தேவ சந்நிதானத்தில் தீர்க்க ஆலோசித்து பதிலளிப்பதாகச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு அன்றிரவே யாருக்கும் தெரியாமல் இரகசியமாய்ப் பிரெஸியாவிற்குப் பிரயாணமானாள்.

ஆறுமாதகாலமாய்த் தங்களைவிட்டுப் பிரிந்த உத்தம தாய் திரும்பவும் நற்சுகத்துடன் தங்கள் மத்தியில் வந்தமர்ந்தாளெனக் கேள்வியுற்ற பிரெஸியா நகர்வாசிகள் கொண்ட ஆனந்தத்திற்கு அளவேயில்லை. எல்லோரும் அவளைக் கண்டு சந்தோஷித்து கடவுளுக்கு நன்றி செலுத்தினர்.

1525-ம் வருஷம் ஜுபிலி வருஷமானபடியால் இத்தாலியா முழுமையிலுமிருந்து ஒரு திருயாத்திரைக் கூட்டம் ரோமாபுரிக்கு புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. நித்திய நகரின் பரிசுத்த ஸ்தலங்களைத் தரிசிக்க வெகுகாலமாய் ஆர்வமுற்றிருந்த ஆஞ்செலாள், இதுவே தகுந்த சமயமென்றெண்ணி ரோமாபுரிக்குப் புறப்பட்டாள். முன்னொருகால் அஞ்ஞானம் நிறைந்து, அக்கிரமம் மலிந்து கிடந்த அவ்வழகிய நகர் தற்போது சத்திய திருச்சபை

யின் தலைநகராய்ச் சிறந்து விளங்குவதைக் கண்ணுற்று சொல்லொண்ணு ஆறுதலடைந்தாள். பின்னர் அர்ச். இராயப்பர் சின்னப்பரின் கல்லறைகளையும், பிரமாண்டமான அழகிய தேவாலயத்தையும், இன்னும் ஜூபிலிப் பலனடையும்படியாக சந்திக்கவேண்டிய திரு ஸ்தலங்களையும், வேதசாட்சிகளின் சரீரங்கள் அடக்கம் செய்யப்படும் கல்லறைச் சுரங்கத்தையும் பத்தி உருக்கத்துடன் சந்தித்து மகிழ்ந்தாள். இப்படி சந்தித்துவரும் ஒருநாள் தற்செயலாய்த் தன்னோடு ஜெருசலேமிலிருந்து திரும்பிவந்த வத்திக்கான் பொக்கிஷதாரான பவுல் அப்பூலியாவைச் சந்திக்க நேர்ந்தது. இவர் வழியாக ஆஞ்செலாளைப்பற்றி அடிக்கடி கேள்விப்பட்ட நமது பரிசுத்த பிதா ஏழாம் கிளமெந்து என்பவர் அவளுக்கு அநேகமுறை பேட்டி கொடுத்ததுமன்றி, அவள் ரோமாபுரியிலேயே தங்கி அங்கு வைத்தியசாலை நடத்திவரும் கன்னியர்களைக் கண்காணித்து வரும்படியாகக் கேட்டார். ஆனால் நமது அர்ச்சியசிஷ்டவள் தாழ்ச்சியுடனும், கபடற்றதனமாகவும் தனது கருத்தைப் பரிசுத்த பிதாவுக்கு வெளியிட அவர் மனமுவந்து தமது அன்பும், ஆதரவும் அவள் ஏற்படுத்தப் போகும் சபைக்கு என்றுமிருப்பதாக உறுதிமொழி கூறி ஆசீர்வதித்து அனுப்பினர். இத்தைரிய மொழிகளால் உற்சாகங்கொண்ட இப்புண்ணியவதி தனது சபை ஸ்தாபகத்திற்காக சுறுசுறுப்புடன் முயற்சி செய்யத் தொடங்கினாள்.

நமது நல்ல ஆண்டவர் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட ஆத்துமங்களைப் புண்ணிய சாங்கோபாங்க சிகரத்தில் சேர்க்கும்படியாக பல்வேறு வழிகளைக் கையாடுகிறார். சாதாரணமாய் அவர் தெரிந்துகொள்ளும் வழி துன்பமும் நிந்தை அவமானங்களுமே. ஆனால் நமது அர்ச்சியசிஷ்டவள்பால் சர்வேஸ்பரன் அத்தகைய முறைகளை அநுஷ்டிக்கவில்லை. உலகில் தேவபத்தி குன்றி உலகசுகபோகத்தில் அமிழ்ந்திக்கிடந்த அக்காலத்து மானிடருக்கு ஆஞ்செலாளின் பத்தி உருக்கம் பரிகாசத்துக்குரியதாயிருக்கவில்லை. அவள் அநுஷ்டித்த தவமும் தரித்திரமும் அவர்

களுக்கு வெறுப்பைக் கொடுக்கவில்லை. அதற்கு மாருய் அவள் எவ்வளவுக்குத் தன்னைத் தாழ்த்தினளோ அவ்வள விற்கதிகமாய் ஜனங்கள் அவளை மதித்து சிநேகித்துச் சங்கித்து வந்தனர். அவள் அமிர்த மொழிகளைச் சலிப் பின்றி கேட்டு மகிழ்ந்தனர். சிறுவர்களுக்குக் கற்பிக்கும் தொழிலைத் தனது கதியாகக்கொள்ளும் சபைக்குப் பிறரு டைய நன்மதிப்பு அதிக அவசியமென தமது நித்திய ஞானத்தால் அறிந்த கடவுள் இங்ஙனம் நிரூபித்தனர் போலும். ஆகவே, ஆஞ்செலம்மாள் அதிக ஊக்கத்துடன் ஜனங்களோடு ஊடாடி, தன்னை அண்டிவரும் பற்பல அந்தஸ்தினருக்கும் அவரவர்களுக்கு வேண்டிய ஆத்தும சரீர உதவிகளைப் புரிந்து வந்தாள். இதுவே சபை ஸ்தா பகத்திற்கு ஏற்றகாலமென ஆஞ்செலாள் எண்ணி அதன் உற்பத்தியைக் கண்டு ஆனந்திக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்தாள்.

ஆனுல் தெய்வசித்தம் இதற்கு மாருயிருந்தது. அச் சமயம் இத்தாலியாவில் வேனிஸ், மிலான் முதலிய பாகங் கள் ஜெர்மானிய விரோதிகளால் தாக்கப்பட, ஆஞ்செ லாள் வசித்துவந்த பிரெஸியாவிலும் அக்கொடியர்கள் நுழைவதாக ஒரு வதந்தி பிறந்தது. உடனே தான் அவ் விடத்திலிருப்பது யோக்கியமல்லவென்றெண்ணி சமா தானமுண்டாகும் வரையில் க்ரெமோனுவில் வசிக்கச் சென்ருள். இங்ஙனம் காரியம் கைகூடிவரும் சமயத்தில் திடும்பிரவேசமாய் எழும்பிய போரினுல் சபை ஸ்தாபகத் திற்கு நேரிட்ட விக்கினத்தை நினைத்து இவ்வுத்தமி வெகு வாய் மனஞ்சோர்ந்து யாது செய்வதென்றறியாமல் திகை த்துநின்ருள். இவ்விதம் ஆஞ்செலாள் தைரியமிழந்து எல்லாம் கெட்டுப்போனதென்று எண்ணியிருக்குங்கால் கன்னியும் வேதசாட்சியுமாகிய அர்ச். ஊர்சுலம்மாள் அவ ளுக்குத் தரிசனையாகி அவளைத் தேற்றி அவள் துவக்கிய கருமத்தை விடாது முடிக்கும்படி உற்சாகப்படுத்தி மறைந் தனள். இச்சம்பவம் நேரிட்ட நாள்முதல் ஆஞ்செலாள் தான் ஏற்படுத்த இருக்கும் அச்சபைக்கு அர்ச். ஊர்சுலம்

மாளின் நாமம் சூட்ட ஆசித்துக்கொண்டிருந்தாள். ஆகவே சடுதியில் தோன்றிய இந்த விக்கினம் விரைவில் நீங்க நித்தமும் கடவுளைப் பிரார்த்தித்து, கடின தபத்தால் தன் சரீரத்தை உபாதிக்கத் தலைப்பட்டாள். ஏற்கனவே பலவீனப்பட்டிருந்த அவள் சரீரம் இவ்வரிய தவ முயற்சிகளைத் தாங்கமுடியாமல் கடின வியாதியாய் விழுந்து மரணாவஸ்தையானாள். கடைசி தேவதிரவிய அனுமானங்களைச் சம்மனசுகளுக்குரிய பத்தியோடு பெற்று, தன் ஜீவிய பலியைத் தன் சிருஷ்டி கர்த்தாவுக்குச் சந்தோஷமாய்ச் சமர்ப்பித்தாள். ஆயினும் தனித் தீர்வையின் பயம் அவளை உபாதிக்க அடிக்கடி நம்பிக்கை முயற்சிகளைச் செய்துவந்தாள். எனினும், பரமண்டலத்திலிருந்து முன்னொருநாள் தனக்குக் கொடுக்கப்பட்ட வாக்கை அவள் மறந்தவளல்ல. வைத்தியர்களால் கைவிடப்பட்ட இப்பரிசுத்த கன்னிகை இக்கண்ணீர் கணவாயை விட்டு தனது நித்திய அன்பரைப் பரலோகத்தில் பின்தொடரும் பாக்கியமான நாளை ஆவலுடன் எதிர்நோக்கி நின்றாள். உடனே அவள் ஒருவித ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்தாள். அங்கு சூழ்ந்திருந்த அனைவரும் அவளது பரிசுத்த ஆத்துமா தன் உடற்சிறையினின்று நீங்கி தனது ஆத்தும பத்தாவாகிய திவ்விய சேசுவிடம் பறந்தோடிற்று என்று எண்ணினர். ஆனால் திடீரென மயக்கத்திலிருந்து எழுந்து சந்தோஷக் கண்ணீர் சிந்தி உரத்த சப்தமாய் சூழ நின்றவர்களை நோக்கி: "சகோதரிகளே, கடவுள் என்னைச் சுகப்படுத்தினார். ஆனால், ஐயோ, நான் ஆவலாய் ஆசித்த மோக்ஷம் எனக்கு வெகு தூரத்திலிருப்பதாகக் காண்கிறேன். அப்பரமபதி சேர நான் இன்னும் தகுதியுள்ளவளல்ல" என்று சொல்லி சர்வவல்லப சர்வேஸ்பரனுக்கு நன்றி செலுத்தும்படியாகக் கோவிலுக்குச் சென்றாள்.

இஃது இங்ஙனமிருக்க, துவக்கின யுத்தம் முடிந்தபாடில்லை. அதற்கு விரோதமாய் வெகு மும்முரமாகவே நடந்துகொண்டுவந்தது. ஐந்தாவது சார்ல்ஸ் என்ற சக்கிரவர்த்தி 1527-ம் ஆண்டில் ரோமாபுரியை முற்றுகை

175914

யிட்டு அழித்து நாசமாக்கினன். அச்சமயத்தில் அர்ச். பாப்பானவர்முதலாய் தமது அரண்மனையை விட்டு தப்பி ஓடி ஒளிந்துகொள்ளவேண்டியதாயிருந்தது. ரோமாபுரி மாத்திரமன்று, இத்தாலியாவின் அநேக பட்டணங்களும் இதே கதியையடைந்தன. இத்தோடு கொள்ளைநோயின் உபத்திரவமும் இத்தாலியாவைத் தாக்க அங்குள்ள மானிடர் அனுபவித்த துன்பமும் துயரமும் சொல்லும் தரமன்று. இப்பெருந் துன்பங்கள்தானும் ஒன்றுமில்லையென்று சொல்லும்படியான விதமாய் வேறொரு பெரும் நிர்ப்பாக்கியம் இத்தாலியாவில் நுழைய பத்தியுள்ள கத்தோலிக்கரும் முக்கியமாய் ஆஞ்செலாளும் பட்ட மனோவியாகுலம் மிகப் பெரிது. அஃதென்னவெனில்: ஜெர்மானியாவில் தோன்றிய பதித விஷம் இத்தாலியாவின் பற்பல மாகாணங்களிலும் நுழையத் துவக்கினதே. ஆனல் கருணை நிறைந்த கடவுள் இந்நிர்ப்பாக்கிய ஜனங்கள்மேல் கிருபைக் கண் நோக்கவே 1529-ல் ஓர் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது.

---

## 5-ம் அதிகாரம்

### சபை ஸ்தாபகம்

ஆஞ்செலாள் க்ரெமோனவில் தங்கியிருந்த மூன்று வருஷமும் அவளுக்கு ஒரு நீண்ட பரதேச ஜீவியமாயிருந்தது. ஆதலின் யுத்தம் முடிந்தமாத்திரத்தில் பிரெஸியாவுக்கு வரத் தீவிரித்தாள். ஆனல் முன்னிலும் அதிகமாய் தனிமையிலொதுங்கி ஜெபத்தியானம் செய்ய ஆசையுற்றவளாயிருந்தபடியால், ஆஞ்செலாள் தான் இதுவரை வசித்துவந்த ரொமானே என்பவரின் மாளிகையை விட்டு சிஸ்தெர்ஸியன் சபைச் சந்நியாசிகளின் மடத்துக் கோவிலுக்குச் சமீபத்திலுள்ள ஒரு வீட்டில் ஒரு சிநேகிதியுடன் வாசஞ்செய்தாள். அனுதினமும் திவ்விய பூசை கண்டு அடிக்கடி தேவாலயங்களைச் சந்தித்துவருவாள். ஒரு நாள் திவ்வியபூசை நேரத்தில் பரவசமாகி ஆகாயத்தில்

உயர்த்தப்பட்டதாக கூடியிருந்த ஜனங்களில் அநேகர் கண்டனர். பலமுறை அதேவிதமான பரவசம் அவளுக்குச் சம்பவிப்பதைக் கண்ட அந்நகர் வாசிகளனைவரும் அவளைப்போற்றிப் புகழ்ந்தனர். இதுமட்டுமன்று, அவளுக்குத் தீர்க்கத்தரிசன வரமும், இருதயத்தின் இரகசியங்களை அறியும் வரமும் பாலிக்கப்பட்டன. இவ்விதமாய்ச் சர்வேஸ்பரன் தமது ஊழியக்காரியை அதியுந்நத வரங்களால் நிரப்பி, ஜனங்களின் நன்மதிப்பையும், பரிசுத்த பாப்பானவரின் ஆதரவையும் ஆசீரையும் இராஜாக்களின் அபிமானத்தையும் பெறச்செய்து வந்த தருணத்தில் தன் சபை ஸ்தாபகத்தைத் துவக்கியிருக்கலாம்.

ஆனால், இக்கன்னியரின் இருதயத்தில் வெகு ஆழமாய் வேரூன்றியிருந்த தாழ்ச்சி என்னும் புண்ணியமானது இத்தகைய மகத்தான கருமத்தை நிறைவேற்ற சர்வேஸ்பரன் தன்னைப்போன்ற ஒரு நீச சிருஷ்டியைப் பிரயோகிக்கக் கூடுமென்று அவள் நம்ப இடம் தரவில்லை. தேவ மகிமையை எங்கும் பரப்ப அணைகடந்த அவாவுற்ற வரையிலும், அவளிடம் பலமாய் ஊன்றப்பட்ட தாழ்ச்சியின் மிகுதியினால், அச்சமயம் தான் செய்யவேண்டிய காரியம் இன்னதெனச் சரியாய் அறிந்துகொள்ளாது கவலை கொண்டாள். இம்மனக்கவலையை ஒருநாள் தன் ஆத்தும குருவானவருக்கு வெளியிட அவர் அவளுக்கு நேர்ந்த சகல சம்பவங்களையும் தெளிவுறக்கேட்டு, இதில் ஏதோ பசாசின் தந்திரம் மறைந்திருக்கலாமென எண்ணி அதிக நாள் ஜெபத்தால் ஆண்டவருடைய சமுகத்தில் ஆலோசித்தார். கடைசியாய் ஆஞ்செலம்மாள் சர்வேசுரனால் நடத்தப்பட்டிருக்கிறாளென்று நிச்சயமாய் உணர்ந்து, அவளைத் தைரியப்படுத்தி, தேவசித்தத்தைத் தாமதமின்றி நிறைவேற்ற வேண்டுமென்றும், அதற்கு ஏற்படக்கூடிய விக்கினங்கள் யாவையும் கடவுள் விலக்கி போதுமான உதவி செய்வாரென்றும் சொல்லி அவளைத் திடப்படுத்தினார்.

தேர்ந்த அறிவும், முதிர்ந்த அனுபோகமுமுள்ள இப்பத்தியுள்ள குருவானவரின் தீர்மானத்தை ஆஞ்செலம்

மாள் தாழ்மையுடன் அங்கிகரித்தாள். அச்சமயம் டெஸன்ஸாேனவில் தான் விட்டு வந்த நான்கு சிநேகிதிகளில் இருவர் மரிக்க மற்றிருவர் தங்கள் சொந்த ஊரை நாடிச்சென்று விட்டதால், ஆத்தும இரட்சணிய அலுவலில் தன்னோடு உழைக்க பிரெஸியாவிலுள்ள பன்னிரண்டு பத்தியுள்ள உயர் குல சீமாட்டிகளைத் தெரிந்துகொண்டாள். இவர்களே இக்கன்னியர் சபையின் அஸ்திவாரக் கற்கள். இவர்கள் துவக்கத்தில் ஓர் மடத்தில் ஒன்றுகூடி ஜீவிக்கவில்லை. தங்கள் பெற்றோரின் இல்லங்களிலேயே ஏகாந்தமாய் ஜீவித்து குறிக்கப்பட்ட தினங்களில் ஆஞ்செலாள் குடியிருந்த வீட்டில் ஒன்றுகூடி ஜெபித்து வருவார்கள். மேலும் ஆஞ்செலாள் அவர்களைத் தனது உத்தம மாதிரிகையாலும் நற்புத்திமதிகளாலும் அவர்கள் செய்யவிருக்கும் மேலான அலுவலுக்கு ஆயத்தப்படுத்தி வந்தாள். ஆஞ்செலாளின் பத்திவேகத்தையும் ஆத்தும இரட்சண்ய ஆவலையும் கண்ட இஸெபெல்லா என்ற ஒரு மேன்குலப் பெண்மணி பிரெஸியாவில் தனக்குச் சொந்தமான ஒரு வீட்டை ஆஞ்செலாளுக்குக் கொடுத்தாள். இவ்வீடு ஊருக்குச் சற்றே ஒதுங்கியிருந்தபடியால், ஏகாந்தத்தை ஆவலோடு நாடிச்சென்ற இக்கன்னிகை சந்தோஷமாய் அதில் பிரவேசித்து, ஒரு ஜெபக்கூடத்தை அதில் ஸ்தாபித்து, இராப்பகலாய் ஜெபித்து வந்தாள். இரண்டு வருடங்கள் இவ்வாறு கழிந்தன. ஆஞ்செலாள் கடவுள் தன்னிடமிருந்து எதிர்பார்க்கும் மகத்தான அலுவலைப்பற்றி இன்னும் பிரசித்தமாய்ப் பேசவில்லை.

ஒரு நாள் இரவு ஆஞ்செலாள் தனது ஜெபக்கூடத்தில் ஜெபத்தியானத்தில் அமிழ்ந்தி தேவ தோத்திரத்திற்காக எப்படிப்பட்ட கன்னியாஸ்திரி சபை ஸ்தாபிக்கலாமென்று இன்னும் யோசித்துத் தாமதித்திருக்கையில், ஓர் சாட்டையைக் கையில் பிடித்துச் சினந்த முகத்துடன் சேசுநாதர் அவளுக்குத் தரிசனையாகி தமது திருச்சபையின் நன்மைக்கு அவசரமான கன்னியர் சபையை ஸ்தாபிக்கிறதற்குத் தாமதம் செய்ததின்பேரில் அவளை வெகு

வாய்க் கண்டித்தார். இதைக்கண்ட ஆஞ்செலாள் மிகவும் பயந்து மனஸ்தாபக் கண்ணீருடன் தன்னுடைய தப்பிதத்திற்காக ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்டு, உடனே அதற்கு முயற்சி செய்வதாக வாக்களித்தாள். மறுநாள் காலை இச்சம்பவத்தைத் தன் ஆத்தும குருவானவருக்கு வெளிப்படுத்தி, தான் ஏற்படுத்த இருக்கும் சபை ஒழுங்குகளை எழுதத் தீர்மானித்தாள். சில நாள் சென்று அவ்வொழுங்குகளைத் தன் பத்திக்கிருத்திய தோழிகளுக்குக் காட்டி தன் கருத்தை அவர்களுக்கு வெளியிட, அவர்களும் சந்தோஷித்து, அவ்வொழுங்குகளைப் பின்பற்ற ஆசித்தனர். தன் தோழிகளிடமுள்ள நல்ல மனதைக் கண்ட ஆஞ்செலாள், சர்வேஸ்பரன் இன்னும் அவர்கள் மேல் தமது தேவ அருள் பிரசாதத்தை மாரிபோல் பொழிந்தருளும்படியாக அவர்கள் சில நாள் ஞான ஒடுக்கத்திலிருக்க ஏற்பாடு செய்தாள். ஒடுக்கம் முடிந்ததும் இக்கன்னியர்கள் திவ்விய இஸ்பிரீத்து சாந்துவை அடைந்து அசனசாலையைவிட்டு வெளிவந்த அப்போஸ்தலரையொப்ப தேவபத்தி சுறுசுறுப்பினாலும், ஆத்தும இரட்சணிய ஆவலினாலும் நிறைந்து வெளிப்போந்தனர். சிறிது போழ்தில் இச்சிறிய கன்னியர் கூட்டமானது பட்டணமெங்கும் பரவி அநேக சிறு பெண்களைச் சேர்த்து கல்வி கற்பிக்கத் தொடங்கினர். இதுவுமன்றி அவர்கள் வைத்தியசாலைகளிலும், சிறைச்சாலைகளிலும் சென்று யாவருக்கும் நன்மை புரிந்து வருவதைக் கண்ட பிரெஸியா நகர்வாசிகள் இத்தகைய பிறர்சிநேகத்தை இதுவரை கண்டதில்லையென்று சொல்லி அவர்களைப் புகழ்ந்தனர். ஒரு மாதத்திற்குள் 72 இளம் பெண்கள் இம்மகத்தான பிறர்சிநேகக் கிரிகையில் ஈடுபட்டு உழைக்கும்படியாக தங்களையும் ஏற்றுக்கொள்ளுமாறு ஆஞ்செலம்மாளிடம் விண்ணப்பம் செய்தனர். இவ்வநுகூலத்தைக் கண்ட நமது அர்ச்சியசிஷ்டவள் சர்வேஸ்பரனுடைய கரம் இவ்வேலையை நடத்துகின்றது எனத்தெரிந்து தைரியமடைந்தாள்.

இங்ஙனம் விரைவில் அநேகர் தேவ அழைத்தலைப் பின்செல்லுவதால், நகரில் ஒருவித கிளர்ச்சியும் உண்டாகா

வண்ணம், ஆஞ்செலாள் தனது சபையின் நவஜீவிகளையும், இன்னும் சந்நியாச வார்த்தைப்பாடு கொடுத்தவர்களையும் முதலாய் தங்கள் தங்கள் குடும்பத்திலேயே ஜீவிக்க விட்டு விட்டாள். மேலும் இப்பேர்ப்பட்ட ஏற்பாடு அக்கால நிலைமைக்கு அத்தியாவசியமெனவும் ஆஞ்செலாளின் முதிர்ந்த அனுபோகம் அவளுக்கு உணர்த்தினது. எனெனில்: பதிதவிஷம் எங்கும் பரவி, தேவபக்தி குளிர்ந்து, குடும்பங்களில் நல்லொழுக்கம் சீர்குலைந்துவந்த அக்காலத்தில் இக்கன்னியர் உலகின் நடுவில் ஜீவித்து இக்கொடிய வெள்ளப் பிரவாகத்தைத் தடுக்கும் ஓர் அணைபோல் இருக்க வேண்டுமென்பது அவளுடைய கருத்து. ஆயினும் இக்கன்னியர் கூடிய சீக்கிரத்தில் ஒரு மடத்தில் ஒன்றுகூடி ஜீவிக்கும் காலத்தை எதிர்நோக்கினாள். இவ்வித விவேக, விமரிசையுடன் காலத்துக்கேற்க ஏற்படுத்திய ஏற்பாட்டைத் திருச்சபை அதிகாரிகளும் ஒப்புக்கொண்டு, இச்சபை தன் சுய உருக்கொண்டு எழும்பும் சந்தோஷ காலத்தை ஆவலுடன் எதிர்நோக்கினர். இச்சபைக் கன்னியர் ஒரே ஆத்துமமும் ஒரே இருதயமும் உடையவர்களாய் ஒன்றித்துத் தேவமகிமைக்காகவும், பிறர் ஆத்தும இரட்சணியத்திற்காகவும் அயராது உழைத்து வருவதைக் கண்ட ஜனங்கள் அவர்களைப் புகழ்ந்து அவர்களுக்குத் "தேவகூட்டத்தார்" என்று பெயர் கொடுத்தனர். அந்நகர் மேற்றிராணியாரும் அக்கூட்டத்தை அங்கீகரித்தனர்; ஆகவே அக்கன்னியர் கூட்டத்திற்கு தக்கமுறையோடு தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு சிரேஷ்ட தாயாரும், அச்சபைக்கு ஒரு நாமம் சூட்டப்படுதலும் அவசியமென அறிந்து இவ்விரு கருத்துகளுக்காக ஒரு கூட்டம் கூட ஓர் தினத்தைக் குறிப்பிட்டனர். இத்தினத்திற்கு முந்தின இரவை ஆஞ்செலம்மாள் ஜெபத்தியானத்தில் செலவழித்திருக்கிறபோது பரவசமாகி, அதில் அர்ச். ஊர்சுலம்மாளை மிகுந்த மகிமைப் பிரதாபத்தோடு தரிசிக்கப்பெற்றாள்.

அடுத்த நாள் எல்லோரும் ஏகோபித்து ஆஞ்செலம்மாளையே தங்கள் முதலாளியாகத் தெரிந்துகொண்டு

ஆஞ்செலாள் என்னும் நாமத்தையே அச்சபைக்குச் சூட்ட வேண்டுமென்று யாவரும் ஒரே மனமாகக் கூற, இத்தாழ்ச்சியுள்ள கன்னிகை தான் முந்தின இரவில் கண்ட தரிசனையை அவர்களுக்கு வெளியிட்டு, அச்சபை "ஊர்சுலின்" அதாவது "அர்ச். ஊர்சுலம்மாளின் மக்கள்" என்ற பெயரால் கூப்பிடப்படவேண்டுமெனச் சொல்லி உறுதிப்படுத்தினள். பின்னர் கன்னியும் வேத சாட்சியுமான அர்ச். ஊர்சுலம்மாளின் வல்லமையுள்ள பாதுகாவலில் சிறு பெண்களுக்கு ஸ்திரமான புண்ணிய வழியைக் கற்பித்து, தீய ஒழுக்கங்களை வேரோடு பிடுங்கி எறிந்து, சர்வேஸ்பரனுடைய மகிமைக்காக எங்கும் சுற்றி தைரியமாய் உழைக்கும்படி தனது கன்னியரைத் தூண்டி அனுப்பினள். அவர்கள் இன்னும் தங்கள் தங்கள் குடும்பங்களில் வசித்து வந்தபடியால் சபைக்குரிய விசேஷ வஸ்திரம் தரிப்பது தற்சமயம் அவசியமில்லாதிருந்தது.

இப்பாலிய சபையின் அங்கத்தினர் வெகு ஊக்க உற்சாகத்துடனும் ஒற்றுமையுடனும் தங்களுக்குத் தேவ திருவுளத்தால் கொடுக்கப்பட்ட அலுவலை நிறைவேற்றி வருவதைக் கண்ட ஆஞ்செலாள் உள்ளம் மகிழ்ந்தனள். அவளும் தனது ஞான மக்களைத் தாய்க்குரிய அன்போடு நடத்திவந்தாள். ஒருவருக்கேனும் மனவருத்தம் நேரிடா வண்ணம் பார்ப்பது அவளது ஏக கவலை. ஒவ்வொருவரின் சொற்ப திறமையையும் கண்டுபிடித்து அதை விர்த்தி செய்வதில் வெகு சாமர்த்தியம் வாய்ந்தவள். தனது பட்சமும் சாந்தமுமான அமிர்த மொழிகளால் சகல இருதயங்களையும் தன் வசமாக்க, சகலரும் அவளைத் தாயைப்போல் நேசித்துக் கீழ்ப்படிந்தனர். இத்தகைய சிறந்த புண்ணியங்களும், சபையை ஆண்டு நடத்துவதில் அனுபோகத் திறமையும் ஒருங்கே பூண்ட ஆஞ்செலம்மாளின் ஆளுகையில் இச்சபை அதிவிரைவில் முன்னேற்றமடையாது எங்ஙனமிருக்கக்கூடும்? நவஜீவிகளின் தொகை அனுதினமும் அதிகரித்தது; அநேக மேன்குல மாதர்களும் இச்சபையில் வந்து சேர்ந்தனர். சபை

தொகையில் அதிகரிக்கவே அதைக் கண்காணித்து நடத்துவதில் ஆஞ்செலாள் விசேஷ விழிப்புள்ளவளாயிருந்தாள். தனது மக்களுக்கு உறுதியான புண்ணியங்களும், சிறந்த கல்வித்திறமையும், போதிய அநுபோகமுமுள்ள ஒரு ஆத்தும குருவைத் தெரிந்துகொள்ள அவள் பட்ட பிரயாசை மெத்த. மேலும் சபைக்குரிய விசேஷ ஒழுங்குகளையும், முக்கியமாய் சந்நியாச வார்த்தைப்பாட்டுக்குரிய ஒழுங்குகளையும், கவனத்துடன் தயாரிக்க, அவ்வூர் மேற்றிராணியார் அவைகளை அங்கீகாரம் செய்தார். ஆயினும் இச்சபை அர்ச். பாப்பானவரால் அங்கீகரிக்கப்படவில்லையாதலால், உடனே ரோமாபுரிக்கு இது விஷயமாய் ஒரு மனு எழுதிக்கொண்டாள். இஃதிங்ஙனமிருக்க ஆஞ்செலம்மாள் வயோதிகத்தினால் வெகு பலவீனமடைந்து வந்தபடியால் தன் கடமைகளைச் சரிவர நடத்தக்கூடாதிருப்பதை அடிக்கடி தன் சகோதரிகளிடம் சொல்லிவருவாள். ஒருநாள் புதிய முதலாளியைத் தெரிந்துகொள்வதற்கென்று ஒரு கூட்டம் கூட்டி, அதில் தன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டாள். சகோதரிகள் எவ்வளவுதான் கெஞ்சி மன்றாடினபோதிலும் அதற்கிணங்கவில்லை. இதைக் கேள்வியுற்ற அந்நகர் மேற்றிராணியார் அவ்விடம் வந்து முதலாளி அலுவலை ஆஞ்செலாள் தன் மரணபரியந்தம் செலுத்துமாறு சர்வேஸ்பரன் பேரால் கட்டளையிட கீழ்ப்படிதலுள்ள இக்கன்னிகை தேவ சித்தத்திற்குப் பணிந்தாள். இச்சந்தர்ப்பத்தில் ஆஞ்செலாள் தன் சகோதரிகளுக்குச் சிறந்த கீழ்ப்படிதலின் மாதிரிகை காண்பித்ததுமன்றி, தன் சபை ஒழுங்குகளோடு தன் சபைக் கன்னியர் தங்கள் மேற்றிராணியாருக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருக்கவேணுமென்ற ஒழுங்கையும் சேர்த்துக்கொண்டாள்.

தேவ திருவுளத்திற்கமைந்து முதலாளி அலுவலைத் திரும்பவும் ஏற்றுக்கொண்ட நாள்முதல் ஆஞ்செலாள் தனது சரீர பலவீனத்தைப் பொருட்படுத்தாது சபையின் முன்னேற்றத்திற்காய் முன்னிலும் பன்மடங்கு அதிக ஊக்கத்தோடு உழைத்தாள். அவளுடைய மக்கள் அடிக்கடி

அவளைச் சந்தித்து ஆலோசனை கேட்க வருவதிற் சலிப் பண்டையவில்லை. எக்கருமத்தையும் அவளுடைய உத்தர வின்றி தொடங்கத் துணியார். தங்கள் க்ஷேமலாபங் களையும், துன்பவருத்தங்களையும் தங்கள் அன்னையிடம் அறிவித்து உற்சாகமும் ஆறுதலுமடைந்து ஏகுவர். இங் ஙனம் ஆஞ்செலம்மாள் தன் மக்கள் மத்தியில் ஒரு சூரி யனைப்போல் ஒளிர்ந்து அவர்களைத் தேவ சிநேகத்தில் நாளுக்குநாள் வர்த்திக்கச் செய்தாள். ஆனால் இப்பிரகாச ஒளி இவ்வுலகிற்கு மறைந்து மறு உலகிற் பிரகாசிக்கும் காலம் சமீபித்துவந்தது.

---

## 6-ம் அதிகாரம்

### அர்ச். ஆஞ்சேலம்மாளின் ஜீவிய முடிவு; ஊர்சுல் சபை மகிமை

ஆஞ்செலம்மாளின் சரீரம் தளர்ந்து வரவரப் பலவீனம் அதிகப்பட்டாலும் அவள் தான் அனுஷ்டித்துவந்த தவக் கிருத்தியங்களைச் சற்றும் குறைத்தவளல்ல. 1540-ம் வருஷத் துவக்கத்தில் திடீரென்று வியாதிப்பட்டு அறை யைவிட்டு வெளிவரக் கூடாமலிருந்தாள். இதுவே தன் கடைசி வியாதி என்று அறிந்த ஆஞ்செலாள் தன் சபை யின் உத்தியோகஸ்தர்களையும், பரிபாலகர்களையும் அழைத்து அவர்களுக்கு நேர்த்தியான புத்திமதிகளை எழு திக் கொடுத்தாள். எனினும் மற்றவர்களுக்கு அவ்வியாதி மரணபத்துக்குரியதாய்த் தோன்றவில்லை. ஆதலால் சகல ரும் கவலையற்று தங்கள் கடமைகளை கவனித்திருந்தனர். அப்படியே ஒருநாள் எல்லோரும் பிரசங்கம் கேட்கும்படி யாகக் கோவிலுக்குச் சென்ற தருணத்தில் இத்தினமே தன் ஜீவியத்தின் கடைசி நாள் என்று தேவ ஏவுதலால் அறிந்த ஆஞ்செலாள், தன் மரணத்திற்குப்பின் தன் சரீ ரத்தைச் சுத்திகரஞ் செய்கையில் தான் எப்போதும் விரும்பி அனுசரித்த மேரை மரியாதைக்குக் குறை வாத

படிக்கு தானே தன்னை சுத்திகரித்துக்கொண்டாள். இதே சமயத்தில் பிரசங்கம் செய்துகொண்டிருந்த குருவானவர் "மரண அவஸ்தையிலிருக்கும் ஆஞ்செலம்மாளுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று சொல்லக் கேட்ட சகோதரிகள் ஓடிவந்து பார்க்க, ஆஞ்செலம்மாள் அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றும் சபை வஸ்திரத்தை அணிந்து கொண்டிருப்பதைக் கண்டு, பிரசங்கியார் உரைத்ததுபோல் இல்லையென்றெண்ணி சந்தோஷித்தனர். ஆனால் ஆஞ்செலம்மாள் தான் அன்றிரவு மரிப்பது நிச்சயமென்றுரைத்தாள். விரைவில் அவ்விடம் வந்த வைத்தியரும் அவ்விதமே கூற கடைசித் தேவதிரவிய அனுமானங்களால் தன்னை மறு ஜீவிய பிரயாணத்துக்குத் தயார் செய்து கொண்டு, தன் கன்னியாஸ்திரிகளுக்கு உருக்கமான புத்திமதிகளைச் சொல்லி அத்தியந்த பத்தி நேசத்தோடே அவர்களுக்காக திவ்விய கர்த்தாவை மன்றாடினாள். அவளண்டையில் அவஸ்தைப் பிரார்த்தனை சொல்ல அவளுடைய கன்னியாஸ்திரிகள் கூடியிருக்கிறபோது, வானத்தினின்று ஓர் பிரகாசக் கதிர் வந்து அவள் முகத்தைத் தேஜோமயமாய்த் துலங்கச் செய்தது. அப்போது ஆஞ்செலம்மாள் "சேசுவே" என்னும் பரிசுத்த நாமத்தைப் பத்தியுடன் உச்சரிக்க, அவளது முயற்சியால் புஷ்பித்த அர்ச். ஊர்சுல் சபையென்னும் சிறந்த மலரானது தன் இதழை விரித்து எங்கும் பரிமளம் வீசப்பெற்ற 5-வது வருஷத்தில், தனது 67-ம் பிராயத்தில் தன் தெய்வீக பத்தாவின் கரங்களில் தனதாத்துமாவை ஒப்படைத்தாள். அத்தூய கன்னிகையின் மரணத்தைக் கேள்வியுற்ற நகரவாசிகள் திரண்டு வந்து ஒரு அர்ச்சியசிஷ்டவளுக்குச் செலுத்தத்தக்க சங்கையைச் செய்தனர். அச்சரீரம் முப்பது நாட்களாய்த் திறந்து வைக்கப்பட்டிருந்தபோதிலும் அது உயிருள்ள சரீரம்போலிருந்தது. இத்தாலியாவின் பல பாகங்களிலிருந்தும் திருயாத்திரிகள் கூட்டங் கூட்டமாய் வந்து சந்தித்தனர். அவள் இறந்த 30-ம் நாள் வெகு ஆடம்பரச் சிறப்புடன் அவளது பரிசுத்த சரீரம் அடக்கம்பண்ணப்பட்டது.

தங்கள் அருமை அன்னையைப் பிரிந்த அக்கன்னியர் ஆயனை இழந்த மந்தைபோல் தவித்து நின்றனர். இவ் வாறுத்துயரின் மத்தியில் அவர்கள் செய்துவந்த வேலை யெல்லாம் தடைப்பட்டுவிட்டது. திரும்பவும் அவ்வேலை களைத் தொடர்ந்து நடத்த ஒருவரும் துணியவில்லை. ஆனால் இச்சபை திருச்சபையின் ஓர் தீபமாய் என்றும் துலங்கவேண்டுமென்பது தேவசித்தமாயிருந்ததால் கூடிய சீக்கிரம் ஒரு கூட்டம் கூடி அதில் புது முதலாளியாக அக்ரீஷியா என்பவளைத் தெரிந்துகொண்டனர். இப் பெண்மணி நமது அர்ச்சியசிஷ்டவள் ஏற்படுத்தின சபையை ஆண்டு நடத்துவதற்கு வேண்டிய சகல வரங் களையும் ஒருங்கே அடையப்பெற்றவள். உண்மையான பத்தியும், பெருமைவாய்ந்த நற்குணங்களும், சிறந்த கல்வி அறிவும், யாவரையும் ஆண்டுநடத்துவதில் அதிக திறமை யும் வாய்ந்தவள். அன்றியும் மேன்குல பிறப்பினாலும், செல்வத்தினாலும் அநேக பிரபுக்களுக்கு அறிமுகமான வள். இவள் அனைவரையும் உற்சாகப்படுத்த, ஆத்தும இரட்சணிய அலுவல் முன்னையைவிட அதிக ஊக்கத் துடன் நடைபெற்றது.

இச்சபை இன்னும் பரிசுத்த பிதாவினால் அங்கீகாரம் செய்யப்படாதபடியால், இப்புதிய முதலாளி திரும்பவும் ரோமாபுரிக்கு இவ்விஷயமாய் மனுசெய்துகொள்ள, அப் பொழுது திருச்சபையை ஆண்டுவந்த மூன்றாம் பவுல் என்ற அர்ச். பாப்பானவர், சிறு பெண்களின் நற்படிப் பினைக்காக உழைக்க ஏற்பட்ட இச்சபையை அங்கீகரித்து 1544-ம் ௵ ஜூன்-மீ 4-உ எழுதிக்கொடுத்த தமது நிருபத்தால் உறுதிப்படுத்தினார். இதன்பின்னர் சபைக் குரிய ஓர் வஸ்திரம் அணியலானார்கள். ஆயினும் இன் னும் அவர்கள் யாவரும் ஒன்றுகூடி வசிக்கவில்லை. 1572-ம் வருஷம் சார்லஸ் பொரோமையாரின் முயற்சியால், அப்போது அர்ச். பாப்புவின் பதவியிலிருந்த எட்டாம் கிரகோரியாரென்னும் பாப்பானவர் இச்சபையின் சகோ தரிகள் ஒன்றுகூடி ஒரு மடத்தில் வசிக்க உத்தாரமளித்த னர்.

இதிலிருந்து இச்சபை மடங்கள் முதல்முதல் இத்தாலியாவின் பல பட்டணங்களிலும், பின்னர் ஐரோப்பாவின் பற்பல தேசங்களிலும், கடைசியாய் அமேரிக்காவிலும் ஸ்தாபிக்கப்பட்டு, கத்தோலிக்கு ஜனசமூகத்தின் முன்னேற்றத்திற்காக பெரிதும் உழைத்துவருகின்றன. இத்தகைய மேலான நன்மைகளின் காரண கர்த்தாவான பரிசுத்த ஆஞ்செலாளின் கல்லறை அனுதினமும் அநேக திருயாத்திரிகளால் சந்திக்கப்பட சர்வேஸ்பரன் தமது தாழ்மையுள்ள ஊழியக்காரியை அநேக புதுமைகளால் மகிமைப்படுத்தினர். இப்புதுமைகளின் விஷயம் ரோமாபுரிக்கு எட்டவே ஆங்கு சகலமும் விசாரணை செய்யப்பட்டு 13-ம் கிளமெந்து என்ற பாப்பானவரால் 1768-ஆம் வணக்கத்துக்குரிய பட்டமும், 1777-ம் ஆம் ஆறும் பத்திநாதரென்ற பாப்பானவரால் முத்திப்பேறுபெற்ற பட்டமும் கடைசியாய் 1807-ம் ஆம் ஏழாம் பத்திநாதரால் அர்ச்சியசிஷ்ட பட்டமும் அளிக்கப்பட்டது. சத்திய திருச்சபையானது இவ்வர்ச்சியசிஷ்ட கன்னிகையின் திருநாளை மே-மீ 3-ம் தேதி கொண்டாடிவருகின்றது.

---

## 7-ம் அதிகாரம்

### அர்ச். ஆஞ்சேலம்மாள் மரண சமயத்தில் சொல்லிய புத்திமதிகள்

1. உங்கள் கடமைகளை நிறைவேற்றுவதில் சர்வேஸ்பரனுடைய மகிமையையும் ஆத்துமாக்களின் இரட்சண்யத்தையும் மாத்திரம் உங்கள் நோக்கமாகக் கொள்ளுங்கள். உங்கள் பராமரிப்பிலுள்ளவர்களின் புண்ணிய வர்த்திப்பிற்காக ஊக்கத்தோடு உழைக்க பிரயாசைப்படுங்கள். தாய்க்குரிய பட்சத்தோடு அவர்களைக் கண்காணித்து நடத்துங்கள். சர்வேஸ்பரன் அவர்களை இரட்சண்ய பாதையில் நிலைநிறுத்தும்படி அவர்களுக்காக அயராது ஜெபியுங்கள்.

2. ஒருபோதும் அவதைரியத்துக்கு இடம் கொடுக்க வேண்டாம். உங்கள் கடமையைச் செய்வதற்கு வேண்டிய சக்தி உங்களிடமில்லை எனத் தோன்றினல் அவ்வேலைக்கு உங்களைத் தெரிந்துகொண்ட ஆண்டவரிடம் உங்களை முழுதும் ஒப்படைத்துவிடுங்கள்.

3. எப்போதும் தாழ்மையில் நிலைத்திருங்கள். தாழ்மையான கிருத்தியங்களைச் செய்ய எப்போதும் ஆசைப்படுங்கள். சர்வேஸ்பரனுடைய உதவியின்றி உங்களால் ஒன்றும் முடியாதென்ற சத்தியம், உங்கள் மனதில் ஆழமாய்ப் பதிந்திருக்கட்டும்.

4. உங்கள் பராமரிப்பிலுள்ளவர்களோடு எப்போதும் சிநேகத்தோடும் மரியாதையோடும் பேசி புழங்குங்கள். ஒருவருடைய குறைகளைத் திருத்த வேண்டியிருப்பின் கூடியமட்டும் சாந்தமான முறைகளையே கையாடுங்கள். பிறர்சிநேகத்தினிமித்தம் அவர்களுடைய சாங்கோபாங்கத்தைக் கருதி நீங்கள் அவர்களைக் கண்டிக்கிறீர்களென்று அவர்கள் கண்டுபிடிக்கும்படியாக உங்கள் வார்த்தைகள் மதுரகுணமென்னும் சம்பாரத்தால் சுவையிடப்பட்டிருக்கட்டும். இச்சாந்தமான முறையினுல் திருத்தப்பட முடியாதவர்களைத் தகுந்த கண்டிப்பினுல் திருத்துவது உங்கள் கடமை. பயந்த சுபாவமுடையவர்களுடன் அன்பாய்ப் பேசி தைரியப்படுத்துங்கள். அதற்கு விரோதமான சுபாவமுடையோருக்குச் சர்வேஸ்பரனுடைய நீதித்தீர்வையை அடிக்கடி ஞாபகப்படுத்துங்கள்.

5. மேலதிகாரிகளுக்கு எப்போதும் கீழ்ப்படிந்துவரப் பிரயாசைப்படுங்கள். உங்களுடைய மனதைப் பின்பற்றுமல் சர்வேஸ்பரன் உங்களுக்களித்த சிரேஷ்டருடைய சித்தத்தைப் பின்பற்றுங்கள். அவர்களுடைய கட்டளைகளை நீங்கள் நிறைவேற்ற முடியவில்லையென்று கண்டால் அதைத் தாழ்ச்சியோடு அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களுடைய தீர்மானத்திற்குக் காத்திருங்கள்.

6. உங்களுக்கு அடியிலுள்ளவர்களின் மட்டில் விசேஷ விழிப்புள்ளவர்களாயிருங்கள். அவர்களுக்கு ஆத்

தும உதவி புரிவதோடு, வேண்டிய இலௌகீக நன்மைகளையும் அளிக்கப் பிரயாசைப்படுங்கள்.

7. பஞ்சேந்திரிய அடக்கத்தைப்பற்றி அடிக்கடி உங்கள் பிள்ளைகளுக்கு வற்புறுத்துங்கள். போஜனம், உடை, நித்திரை முதலியவைகளில் எப்போதும் மட்டுத்திட்டமாயிருக்கும்படி கற்பியுங்கள். அவர்களுடைய சம்பாஷணைகள் சுருக்கமானதாகவும் பரலோகத்திற்கடுத்தவைகளாகவுமிருக்கும்படி கவனியுங்கள்.

8. கிறீஸ்துநாதரின் புதிய கற்பனையாகிய பிறர்சிநேகம் உங்கள் மத்தியில் அரசாளக்கடவது. இதற்காக ஒவ்வொரு சகோதரியும் பொது ஜீவியத்திற்குப் பழுது வாராதபடி பார்த்துக்கொள்ளட்டும். உங்கள் சபை ஒழுங்குகளை நுணுக்கமாய் அனுசரியுங்கள்.

9. உங்கள் நடக்கையானது உங்களுக்கு அடியிலுள்ளவர்களுக்கு ஓர் மேல்வரிச்சட்டமாயிருக்கட்டும். நீங்கள் போதிப்பதை நீங்களே அனுசரியாவிடில் உங்கள் போதனையால் யாதும் பிரயோஜனமில்லை.

10. உலக பெண்களோடும், முக்கியமாய் ஆண் பிள்ளைகளோடும், அதிக பழக்கம் வைக்கவேண்டாம். இது ஞான ஜீவியத்திற்கு அதிகப் பெரிய விக்கினம். உலக நாட்டமுடையவர்களோடு அதிகமாய் சம்பாஷித்தால் உங்கள் பரிசுத்த தனத்தை விரைவில் இழந்துவிடுவீர்கள்.

11. பாரபட்சமின்றி எல்லோரையும் ஒருகண்டசீராய் சிநேகியுங்கள். வெளிப்பார்வைக்கு ஒன்றுக்கும் உதவாதவர்களாகக் காணப்பட்டவர்கள், அரிய பெரிய காரியங்களைச் செய்து முடிக்க தேவ திருவுளத்தால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருக்கலாம்.

12. உங்கள் ஸ்திதிக்குத் தக்க தருமம் செய்யப் பின்வாங்கவேண்டாம். ஏழைகளுக்கு உங்களால் கூடிய ஆத்தும சரீர நன்மைகளைத் தாராளமாய்ப் புரியுங்கள்.

தருமம் ஆத்துமங்களை விலைக்கு வாங்க உபயோகிக்கக் கூடிய பக்தியுள்ள உபாயம்.

13. உங்களுக்கு அடியிலுள்ளவர்களின் நாமங்களை யும் அவர்களின் இயற்கையான சுபாவங்களையும், அவர்க ளின் ஸ்திதியையும் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருங் கள். அவர்களது இயற்கையான திறமைகளை நற்பிரயோ கம் செய்யப் பழக்குங்கள்.

14. கடைசியாய், சேசுவின் சிநேகத்திற்காக ஒரு வர் ஒருவரைச் சிநேகியுங்கள். இப்பிறர்சிநேகத்தைக் காப்பாற்ற சர்வ ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்.

175914

# பொருள் அட்டவணை


| அதிகாரம் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | பிறப்பும் இளமைப்பருவமும் ... | 1 |
| 2 | சிறு பெண்களின் முன்னேற்றத்துக்காக உழைத்தல் ... ... | 8 |
| 3 | பிரெஸியாவில் சபை ஸ்தாபிக்க முயற்சிகள் | 13 |
| 4 | திருயாத்திரைகள் ... ... | 16 |
| 5 | சபை ஸ்தாபகம் ... ... | 26 |
| 6 | அர்ச். ஆஞ்சேலம்மாளின் ஜீவிய முடிவு; ஊர்சுல் சபை மகிமை ... | 33 |
| 7 | அர்ச். ஆஞ்சேலம்மாள் மரண சமயத்தில் சொல்லிய புத்திமதிகள் ... | 36 |



PERMISSU SUPERIORUM.

Imprimatur: ✠ AUGUSTINUS, S.J., *Ep. Trichinopolit.*

## அர்ச்சியசிஷ்டவர்களின் சரித்திர புஸ்தகங்கள்

**அர்ச். லோயோலா இஞ்ஞாசியார் சரித்திரம்** (Revised Edition)—அர்ச். இஞ்ஞாசியாருடைய ஜீவிய வரலாறுகளை நன் மனதுடன் வாசித்தறியும் இருதயங்களில் தெய்வ பக்தி, தெய்வ நேசம் விர்த்தியடையாமற்போவது கூடாத காரியம். இவ் வுத்தம புண்ணியசீலரின் சரிதையை பெரியோரும் சிறியோரும் வாசித்து ஞானப்பலனடையவேண்டுமென சுலபமாய்க் கண்டு பிடிக்கக்கூடிய எளிய நடையில் இனிது கூறப்பட்டுள்ளது.

(2-ம் பதிப்பு—639 பக்கங்களுள்ளது)

கலிக்கோ கட்டடம் ... ரூ. 1—6—0

**வேதசாட்சியான தேவசகாயம்பிள்ளை சரித்திரம்**—இவ்வரிய நூலில் அவர் மனந்திரும்பின வர்த்தமானமும், அவர் பெற்றுக் கொண்ட வேதசாட்சிக் கிரீடமும் சுருக்கமாய் வெளிப்படுத்தி யிருக்கிறது. இவ்வரிய புனித நூல், ஒவ்வொரு தமிழபிமானர் கையிலும் இருக்கவேண்டியது இன்றியமையாதது.

(9-ம் பதிப்பு—72 பக்கங்களுள்ளது) ... ரூ. 0—2—0

**அர்ச். ரீத்தா-தெ காசியம்மாள் சரித்திரச் சுருக்கம்**—அர்ச். அகுஸ்தீன் சபைக் கன்னியாஸ்திரியாகிய இந்த அம்மாளின் பிறப்பு, வளர்ப்பு, கலியாணம், தன் கணவனையும் இரு மக்களையும் பறிகொடுத்தபிறகு மடத்தில் பிரவேசித்ததும், அர்ச்சியசிஷ்டவ ளின் ஜீவியகாலத்திலும் மரணமடைந்தபிறகும் செய்த புதுமை களும் சங்க்ஷேபமாய்க் கூறப்பட்டிருக்கின்றன.

(3-ம் பதிப்பு—32 பக்கங்களுள்ளது) ... ரூ. 0—1—0

**அர்ச். ஜான்மரி வியான்னி கூரேதார்ஸ் சரித்திரம்**—இதில் இந்த அர்ச்சியசிஷ்டவருடைய உள்ளரங்க ஜீவியமும், வெளிய ரங்க நடபடிக்கைகளும், செய்த புதுமைகளும், பிரசங்கித்த அமிர்த பிரசங்கங்களும், பாவிகளை மனந்திருப்பின வரலாறுகளும் அடங்கியிருக்கிறது. (248 பக்கங்களுள்ளது) ரூ. 0—6—0

**சேசுவின் சிறிய புஷ்பம்**—இப்பரிசுத்த கன்னிகையின் ஜீவிய சரித்திரச் சுருக்கம், இடையிடையே 11 நேர்த்தியான படங்களுடன் அவளுடைய பிறப்பு, வளர்ப்பு, கற்பு, கல்வி, தேவ அழைத்தல், உத்தம துறவற ஜீவியம், பாக்கியமான மரணம் முத லிய சம்பவங்கள் அப்பெண்மணியின் வார்த்தையிலேயே வர்ணிக் கப்பட்டிருக்கிறது.

(2-ம் பதிப்பு—116 பக்கங்களடங்கியது) ரூ. 0—6—0

☞ மற்ற செலவுகள் பிரத்தியேகம்.

---

**வேண்டியவர்கள்: திருச்சிறுப்பள்ளி செயின்ற் ஜோசெப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரேஸ் சூப்பேரின்டேண்டுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.**